பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 தை 12 சனிக்கிழமை 26.01.2019 கதிர் 82

**இனி இது ரகசியம் அல்ல!**

அரசியல் வேறு; இராஜதந்திரம் வேறு.

அரசியல்வாதிகளுடன் விவாதிக்கும் முறைமை வேறு; இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடும் முறைமை வேறு. இரண்டிலும் பயன்படுத்தப்படும் சொல்லாடல்கள், அணுகுமுறைகள், மார்க்கங்கள் வித்தியாசமானவை. பக்கம் 02

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி விடயத்தில் அநீதி



## தகுதியற்றவர் மஹிந்த; தவறிழைத்துள்ளார் சபாநாயகர் சபையில் கேள்விகளைத் தொடுத்து சீறினார் சம்பந்தன்

கொழும்பு, ஜனவரி 26

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து பறிக்கப்பட்டு அரசின் ஓர் அங்கமான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டமை அநீதியான செயற்பாடு. இந்த விடயத்தில் சபாநாயகர் தவறிழைத்துள்ளார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் குற்றம்சாட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

(உரையின் முழு விவரம் 08 ஆம் பக்கத்தில்)

## மக்கள் குரலுக்கு இடமளியுங்கள்

### ஐ.தே.க.விடம் டலஸ் கோரிக்கை



கொழும்பு, ஜன. 26

மனசாட்சிக்கு இடமளித்து மக்கள் குரலை ஒலிக்கச் செய்வதற்கு அனுமதிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரிக்கை விடுத்தார்.

மாகாண சபைத் தேர் பக்கம் 11

## கிட்டாமல் போனது 1000 ரூபா அடிப்படைச்சம்பளம் 700 ரூபா

### கூட்டு ஒப்பந்தம் திங்கள் கைச்சாத்து

கொழும்பு, ஜன. 26

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒருநாளுக்கான அடிப்படைச்சம்பளம் 700 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள் பக்கம் 11

## சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்தம் குறைபாடுகளுடன் உள்ளது

### அந்நாட்டுப் பிரதமரிடம் எடுத்துரைத்தார் மைத்திரி

சிங்கப்பூர் சிற்றி, ஜன. 26

சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்தத்தில், தமது தரப்பில் குறைபாடுகள் உள்ளதாக சிங்கப்பூர் பிரதமரிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பக்கம் 11

## மஹிந்த அணியினர் தொடர்ந்தும் இனவாதத்தைத் தூண்டுகின்றனர்

### கொழும்பு மேயர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 26

மஹிந்த ஆதரவு எதிரணியினர் நாட்டில் இனவாதத்தைத் தொடர்ச்சியாக பரப்பி வருகின்றனர் எனக் கொழும்பு பக்கம் 11

## கிழக்கில் அமெ. படைமுகாம்: நாட்டுக்கு அச்சுறுத்தலாகாதா?

### பிரதமரிடம் டக்ளஸ் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஜன. 26

கிழக்கில் அமெரிக்க இராணுவ முகாம் அமைக்கப்படுவது தொடர்பில் உண்மைத் தன்மை பக்கம் 11

## நாயாற்றில் புத்தருக்கு இராணுவப் பாதுகாப்பு

முல்லைத்தீவு, ஜன. 26

முல்லைத்தீவு–நாயாறு நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பௌத்த விகாரை மற்றும் புத்தர் சிலைக்கு பொலிஸ் மற்றும் இரா பக்கம் 11

## மாலியில் கண்ணிவெடித் தாக்குதல்! இலங்கைப் படையினர் இருவர் சாவு!!

### மேலும் மூன்று இலங்கைச் சிப்பாய்கள் காயம்

பமாகோ, ஜன. 26

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கை இராணுவ வாகனத் தொடரணி ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதில், துருப்புக்காவி ஒன்றில் பயணம் செய்த இரண்டு பக்கம் 11



## பிரிகேடியரைக் காப்பாற்ற களமிறங்கியது இலங்கை!

கொழும்பு, ஜன. 26

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராகப் பிரிட்டன் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட அனைத்து நடவடிக்கைகளையும் பக்கம் 11



## கிழக்கில் ராணுவத் தளம் அமைக்காது அமெரிக்கா

### சபையில் கூறினார் கிரியெல்ல

கொழும்பு, ஜன. 26

கிழக்கு மாகாணத்தில் அமெரிக்க இராணுவத் தளம் அமைப்பதற்கான அவசியம் இல்லை. இதனை அமெரிக் பக்கம் 11

## ஜனநாயகத்தை மீறியோரே அரசை விமர்சிக்கின்றனர்

### பிரதமர் சபையில் சாட்டை

கொழும்பு, ஜன. 26

18 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக ஜனநாயகத்தை மீறியவர்களே தற்பொழுது, நீதித் பக்கம் 11

## தமிழ் அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய்க!

### அரசிடம் ரிஷாத் கோரிக்கை

வவுனியா, ஜன. 26

சிறிய சிறிய குற்றங்களுக்காக பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள பக்கம் 11

## பேசாலைக் காட்டுக்குள் வெடிபொருட்கள் மீட்பு



மன்னார், ஜன. 26

மன்னார், பேசாலை நடுக்குடா கடற்கரைக்கு அருகிலுள்ள காட்டுப்பகுதியில் பெருமளவு வெடிபொருள்களை நேற்று முன்தினம் மாலை மீட்டுள்ளதாக பக்கம் 11

காலைக்கதிர் Kalaikkathir



# இலங்கை பொறுப்புக் கூறுவதற்கு காலம் கடந்து கொண்டிருக்கிறது

## சர்வதேச மன்னிப்புச்சபை காட்டம்

கொழும்பு, ஜன. 26

இலங்கை அரசு 2015ஆம் ஆண்டில் வாக்களித்தவாறு உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டை ஈடுசெய்தல் உள்ளிட்ட பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குரிய காலம் கடந்து கொண்டிருக்கின்றது. யுத்தம் முடிவடைந்து இவ் வருடத்தின் மே மாதத்துடன் பத்து வருடங்கள் பூர்த்தியடையும் நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் எவ்வளவு காலம் உண்மைக்காகவும், நீதிக்காகவும் காத்திருப்பது? என்ற கேள்வி எழுகின்றது எனச் சர்வதேச மன்னிப்புச்சபை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பொறுப்புக்கூறல் கடப்பாடுகளில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து தெற்காசியப் பிராந்தியங்களுக்குப் பொறுப்பாக இயங்கிவரும் சர்வதேச மன்னிப்புச்சபை அலுவலகம் விடுத்துள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# 'கோரம்' இல்லாதமையால் நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 26

நாடாளுமன்றத்தில் போதியளவு உறுப்பினர்கள் இல்லாததன் காரணமாக சபை நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி பிற்பகல் ஒரு மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

வடக்கு–கிழக்கு உள்ளிட்ட ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தலை விரைவாக நடத்துமாறு கோரிச் சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கொண்டு வந்தார்.

எனினும் நேற்றைய விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய வடக்கு – கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சிகள் பங்குபற்றவில்லை.

கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்ற கோரிக்கையைப் பிரதான எதிர்க்கட்சியும், ஜே.வி.பி மற்றும் ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகள் முன்வைத்தன.

எனினும் நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பான பிரச்சினையில் சபையில் வாதாடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான விவாதத்தின் போது சபையில் இருக்கவில்லை.

பெரும்பான்மையினக் கட்சிகள் வடக்கு – கிழக்குத் தேர்தல் குறித்து சுட்டிக்காட்டிப் பேசியபோதிலும் கூட அந்த மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் விவாதத்தில் கலந்து கொள்ளாது வெளியேறியிருந்தன.

எனினும் ஈ.பி.டி.பியின் பொதுச்செயலாளர் டக்ளஸ் தேவானந்தா மாகாண சபை தேர்தலை நடத்தவேண்டும் என்ற அழுத்தமாக கோரிக்கையை முன்வைத்துப் பேசினார்.

இந்த நிலையில் போதிய உறுப்பினர்கள் சபையில் இல்லாததால் சபை நடவடிக்கைகளை எதிர்வரும் 5ஆம் திகதிவரை சபாநாயகர் ஒத்திவைத்தார். (ஐ)

## ஓட்டோ தீவைத்து எரிப்பு!

வவுனியா, ஓமந்தை பகுதியில் ஓட்டோ ஒன்று தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை, மருதங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை) இரவு இனந்தெரியாதவர்களால் இந்த ஓட்டோ தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஓட்டோவை ஓமந்தைப் பகுதியில்வைத்துஇருஇளைஞர்கள் வழிமறித்து தாக்குதல் மேற்கொள்வதற்கு முயற்சித்தனர்.

இதன்போது ஓட்டோச் சாரதி ஓட்டோவை அவ்விடத்திலிருந்து எடுத்துச்சென்றபோது அந்த இளைஞர்களும் அவரைப் பின்தொடர்ந்து சென்றுள்ளனர்.

இவர்களின் நடவடிக்கையில் அச்சமடைந்த சாரதி ஓமந்தை மருதங்குளத்தில் உள்ள அவரது உறவினர் வீட்டுக்கு முன்பாக ஓட்டோவைநிறுத்திவிட்டுவீட்டுக்குள் சென்றுள்ளார்.

இதையடுத்துபின்தொடர்ந்துவந்த இரு இளைஞர்களும்ஓட்டோவைத் தீவைத்துஎரித்துவிட்டுஅவ்விடத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

ஓமந்தை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை, ஓட்டோவைத் தீயிட்டுக் கொழுத்தியவர்களை உரிமையாளர் அடையாளங்காட்டிய போதிலும் பொலிஸார் இதுவரை எவரையும் கைதுசெய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது புரியத்தக்கதே.

ஆனாலும் யாரோடு ஊடாடினாலும் சில விடயங்களை அவற்றுக்குரிய சொல்லாடல்களில் கையாளவிட்டால், அந்த விடயத்தின் உண்மைத்தன்மை வெளிப்படாமல் போய்விடும்.

தமிழர்கள் தரப்பில் பெரும் எண்ணிக்கையான அரசியல் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகளைச் சந்தித்து, ஊடாடி, கருத்துப்பரிமாறி, கலந்துரையாடி, காய் நகர்த்திய அனுபவசாலிகள் சம்பந்தனும் சுமந்திரனும்.

இராஜதந்திரிகளோடும், அரசியல்வாதிகளோடும் எத்தகைய சொல்லாடல்களைப் பயன்படுத்த வேண்டும்என்பதைஅவர்களுக்கு வேறுயாரும்சொல்லிக்கொடுக்கத் தேவையில்லை. அதுவும் கூட எமக்கு விளங்குகின்றது. ஆனாலும் ஒன்றைச் சுட்டிக்காட்டுவது நமது கடமையாகின்றது.

கடந்த புதனன்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரிகளைக் கூட்டமைப்புத் தலைவர்களான சம்பந்தனும் சுமந்திரனும்சந்தித்தினர். அதனை ஒட்டி கூட்டமைப்பினால் ஓர் அறிக்கையும் வெளியிடப்பட்டது.

*"இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் புதிய அரசமைப்பின் உள்ளடக்கம் மற்றும் நோக்கங்கள் குறித்துத் தமது மக்களுக்கும் கட்சியினருக்கும் தெளிவுபடுத்துவதில் அசமந்தப் போக்கை கொண்டுள்ளன என சுமந்திரன் சுட்டிக்காட்டினார்."* – என்று அந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டிருந்தது.

ஆங்கிலத்தில் என்ன சொல்லாடலை சம்பந்தன் – சுமந்திரன் தரப்பினர் பயன்படுத்தினர் என்பது தெரியவில்லை. ஆனாலும் இவ் விவகாரத்தில் 'அசமந்தம் காட்டுகின்றனர்' என்ற சொல்லாடலைப் பயன்படுத்துவது பொருத்தமற்றது – தவறானது – என்பது எனது கணிப்பீடு.

புதிய அரசமைப்புக் குறித்துத் தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் இரண்டும் தமது மக்களுக்குத் தெளிவுபடுத்துவதில் அசமந்தம் காட்டவில்லை. மாறாக இனவாதப் போக்கில் மக்களை இந்த விடயத்தில் தவறாக வழிப்படுத்துவதில் தீவிரம் காட்டுகின்றன என்பதுதான் உண்மை நிலைமை.

இவ்விவகாரத்தில், தமது மக்களைத் தவறாக வழிநடத்துவதில் – இனவாதப் போக்கில் கிளர்ந்தெழ வைப்பதில் – தென்னிலங்கைக் கட்சிகள் தீவிரம் காட்டுகின்றபோது, அவ்விடயத்தில் அவை அசமந்தமாக நடந்து கொள்கின்றன என்ற சாரப்பட தமிழர் தலைவர்கள் இராஜதந்திரிகளுக்கும், வெளிநாட்டு அரசியல் பிரமுகர்களுக்கும் கருத்துக் கூறுகின்றமை உண்மையின் தீவிரத்தன்மையை அவர்களுக்கு உணர்த்துமா என்பதுதான் கேள்வி.

மூடிய அறைக்குள் நடந்த உரையாடல்களின்போது உண்மையின் தீவிரத்தை எடுத்துணர்த்திய பின்னர், வெளியில் சந்திப்புப் பற்றிய பகிரங்க அறிக்கையில் 'அமுக்கி' வாசிக்கும் சொல்லாடல்களை கூட்ட மைப்புப் பயன்படுத்தியதோ தெரியவில்லை...!

-மின்னல்-

# சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பத்தாவது தடவையாகவும் நடைபெறுகின்ற இந்தக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு யாழ்.பொது நூலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட், யாழ். அரச அதிபர் அ.வேதநாயகன், இந்திய துணைத் தூதுவர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையான மூன்றுநாட்கள் யாழ் மாநகரமைதனத்தல் நடைபெறவிருக்கும் இந்தக் கண்காட்சியை மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் உத்தியோகபூர்வமாக நாடா வெட்டி திறந்து வைத்தார். (ஐ-07)

# கோட்டாவுக்கு அலுவலகம் வெள்ளவத்தையில் இல்லை

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெள்ளவத்தையில் தனிப்பட்ட அலுவலகம் அமைக்கப்படுவதாக கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லையென அவரது ஊடகப் பேச்சாளர் மிலிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை டபிள்யு.ஏ.சில்வா மாவத்தையில் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரில் அலுவலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சிலர் கூறி வருகின்றனர். இது குறித்து, கோட்டாபயவின் ஊடகப் பேச்சாளர் மிலிந்த ராஜபக்ஷ மறுப்பு தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ, அலுவலகம் அமைக்க எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை எனவும் கோட்டாபய அலுவலகம் அமைப்பது தொடர்பில் வேறு எவருக்கும் பொறுப்புக்களைக் கையளிக்கவில்லை எனவும் அவர் தெளிவுபடுத்தினார். (ஐ)

# யாழ்.நகர உணவகத்தில் வாங்கிய உணவுப் பார்சலுக்குள் மட்டத்தேள்



யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணம் நகரில் உள்ள உணவகத்தில் வாங்கிய மதிய உணவுப் பொதியில் மட்டத்தேள் காணப்பட்டதாக வாடிக்கையாளர் ஒருவர் மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் முறைப்பாடு செய்துள்ளார். யாழ். போதனா வைத்தியசாலையின் அருகில் உள்ள உணவகத்தில் வாடிக்கையாளர் ஒருவர் வழமை போன்று நேற்று மதிய உணவு ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளார்.

பின்னர்தான் வேலை செய்யும் வங்கிக்குச் சென்று உணவைப் பிரித்து பார்த்தபோது, கறிகளுக்கு இடையே மட்டத்தேள் காணப்பட்டது.

இதனால் அவர் வாடிக்கையாகச் செல்லும் அந்த உணவகத்துக்கு சென்று உரிமையாளரிடம் முறையிட்டுள்ளார்.

எனினும் உணவக உரிமையாளர், வாடிக்கையாளரை உதாசீனம் செய்ததுடன் உணவுப் பொதியை மீளப்பெற்று வீசி அச்சுறுத்தியுள்ளார்.

உணவக உரிமையாளர் மீது வாடிக்கையாளர் பொதுச்சுகாதாப் பரிசோதகரிடம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முறைப்பாட்டை செய்துள்ளார். (ஐ)

## மீண்டும் தேசிய அரசு? பேச்சுக்கள் மும்முரம்

மீண்டும் தேசிய அரசை உருவாக்குவது தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வருடன், இது தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில், இந்த எம்.பிக்களுடன், பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளதாகவும், அவ்வாறு தேசிய அரசு அமைக்கப்படுமாயின் அவர்கள், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கத் தயாராக உள்ளனரென்றும் தெரியவருகிறது. (ஐ)

# தமிழர் தரப்பின் கருத்தறியும் முயற்சியில் பிரிட்டன் தீவிரம்

## ஜெனீவாக் கூட்டத்துக்கு முன்னோடியாக

கொழும்பு, ஜன. 26

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், தமிழ் மக்களினதும், தமிழ் அரசியல் தலைவர்களினதும் கருத்துக்களை அறிந்து கொள்ளும் முயற்சிகளில் பிரிட்டன் இறங்கியுள்ளது.

ஜெனீவாத் தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்ற இலங்கை அரசு தவறியுள்ள நிலையில், எதிர்வரும் மார்ச் மாதம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசு அதற்குப் பதிலளிக்கவேண்டிய நிலையில் உள்ளது.



2017ஆம் ஆண்டு இலங்கை அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத நிலையில், மீண்டும், ஒரு தீர்மானத்தை ஜெனீவாவில் கொண்டு வரும் முனைப்புகள் தீவிரமடைந்திருக்கின்றன.

இப்போது ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா அங்கம் வகிக்காததால், பிரிட்டனின் தலைமையில் சில நாடுகள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த நிலையில், பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம், அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களில் தமிழ் மக்கள், சிவில் சமூகம், அரசியல் தலைமைகளின் கருத்துக்களை அறிவதற்காக, உயர்மட்ட அதிகாரி ஒருவரை இலங்கைக்கு அனுப்பியுள்ளது பிரிட்டன்.

இலங்கை வந்துள்ள பிரிட்டன் வெளிவிவகாரப் பணியகத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான திணைக்களத்தின் தலைவரும், இந்தியாவுக்கான இணைப்பாளருமான பர்கஸ் ஒல்ட், கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன் பின்னர் யாழ்ப்பாணம் சென்ற அவர், யாழ். மாநகர முதல்வர் இமானுவல் ஆனல்ட் மற்றும் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இவர் மேலும் பல அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து கருத்துக்களை அறிந்து வருகிறார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரக அதிகாரிகளின் துணையுடன் கருத்தறியும் முயற்சியில் பர்கஸ் ஒல்ட் ஈடுபட்டுள்ளார். ஜெனீவாவில் முன்னெடுக்கப்படவுள்ள நகர்வுகளுக்கான முன்னேற்பாடாகவே இவரது சந்திப்புகள் அமைந்திருப்பதாக கூறப்படுகிறது. (ஐ)

# கிளிநொச்சியில் அதிக பனி மூட்டம்



கிளிநொச்சி, ஜன. 26

கிளிநொச்சியில் நேற்று வழமைக்கு மாறாக அதிக பனி மூட்டம் நிலவியது.

காலை 7.30 மணி வரை கடுமையான பனி மூட்டம் காரணமாக பாடசாலை மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

சுமார் நூறு மீற்றர் தூரத்திற்குள் பயணிப்பவர்கள் எவரையும் தெரியாத அளவுக்கு நிலைமை காணப்பட்டது. (ஐ)

# அரசுடன் இணைந்து செயற்பட முடியாது

## பிரிட்டன் அதிகாரியிடம் விக்கி

யாழ்ப்பாணம், ஜன. 26

தமிழர்களுக்கான முழுமையான உரிமைகளை அரசு கொடுத்த பின்னரே மத்திய அரசுடன் இணைந்து செயலாற்ற முடியும் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பிரிட்டனின் தெற்காசியத் திணைக்களத் தலைவரும், இந்திய ஒருங்கிணைப்பாளருமான பர்கஸ் ஒல்ட் நேற்று முன் தினம் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது, தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் திரும்பவும் கையளிக்கப் பட்டதன் பின்னரே தேசிய நீரோட்டத்தினுள் உள்ளீர்க்கப்பட்டு செயலாற்ற முடியும் என்றும் விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.



ஆனால் முதலில் தமிழர்களைக் கிணற்றினுள் இருந்து வெளியே கொண்டு வரவேண்டும் என்றும் பிரிட்டன் பிரதிநிதிகளிடம் முன்னாள் முதல்வர் எடுத்துரைத்தார்.

அத்துடன் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு சமஷ்டி முறையிலான ஒரு தீர்வை அளிக்க பிரிட்டன் தனது முழு அழுத்தத்தையும் வழங்கவேண்டும் என்றும் முன்னாள் முதல்வர் கேட்டுக்கொண்டார்.

இதன்போது புதிய அரசமைப்பு உள்ளிட்ட சமகால விடயங்கள் குறித்தும் புதிய அரசியல் கட்சியைத் தொடங்கியதற்கான காரணம் குறித்து விக்னேஸ்வரனிடம் பிரிட்டன் பிரதிநிதிகள் வினவியுள்ளனர்.

சுமார் நாற்பத்தைந்து நிமிடங்கள் நடைபெற்ற இச்சந்திப்பின் நிறைவில் தனது எதிர்காலப் பணிகளுக்கு பர்கஸ் வாழ்த்து தெரிவித்தார் எனவும் விக்னேஸ்வரன் கூறினார். (ஐ)

# ஐ.தே.க. தலைவராக மீண்டும் ரணில்தான்



கொழும்பு, ஜன. 26

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, ஏற்கனவே இருக்கும் உறுப்பினர்கள் சபையை எதிர்வரும் ஆண்டுக்கும் தெரிவு செய்வதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அடுத்து வரும் ஆண்டுக்கான அந்தக் கட்சியின் தலைவராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை நேற்று முன் தினம் கூட்டத்தின்போது மேலும் சில பதவிகளுக்குப் புதியவர்கள் நியமிக்கப்பட்டனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் கூறினார். (ஐ)

# ஊடகவியலாளர்கள் படுகொலைக்கு நீதி கோரி யாழில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26

ஊடகவியலாளர்கள் படுகொலைக்கு நீதி வழங்கக் கோரி இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

திருமலையில் 2006 ஆம் ஆண்டு படுகொலையான ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 13 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள, படுகொலையான ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபி முன்றிலில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு, படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். ஊடக மையத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் கிழக்கு ஊடக அமையம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் ஊடக சுதந்திரத்திற்கான செயற்பாட்டுக்குழு, தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஊடகவியலாளர் அமைப்புக்கள் இணையவுள்ளன.

ஊடகப் படுகொலைக்கான நீதி கோரும் இந்தப் போராட்டத்தில் அனைவரையும் திரண்டு நீதிக்காகக் குரல் கொடுக்குமாறு ஊடக அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# பாடசாலைகளில் பெற்றோர்களிடம் பணம் பெற்றால் உடன் நடவடிக்கை

## கல்வி அமைச்சர் பணிப்புரை

கொழும்பு, ஜன. 26

பாடசாலைகளில் பெற்றோர்களிடம் இருந்து பணம் பெற்றுக்கொள்வதைத் தடுப்பதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பெற்றோர்களிடம் இருந்து பாடசாலை நடவடிக்கைகளுக்காகப் பணம் சேகரிக்கப்படுகின்றதா என்பதைக் கண்டறிவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



இவ்வாறான முறைப்பாடுகளை கே.ஜீ.சீ.மகேஷிக்கா, உதவி கல்விப் பணிப்பாளர், தேசிய பாடசாலைக் கிளை, கல்வியமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

பெற்றோர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு அண்மையில் இடம்பெற்ற அதிகாரிகளுடனா முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ளார்.

பணம் சேகரிப்பது தொடர்பில் கல்வியமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய அனைத்து அதிகாரிகளும் செயற்பட வேண்டும்.

இலவசக் கல்வியின் நன்மைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் பெற்றோர்கள் மீது தேவையில்லாத அழுத்தங்களைக் கொடுக்கும் இவ்வாறான செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## யதார்த்தத்தை ஒப்புக் கொள்ளுங்கள்!

**தமிழர் பிரதேசத்திலும் சரி, தென்னிலங்கையிலும் சரி, புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியே அரசியலின் பிரதான பேசுபொருளாக உள்ளது.**

**அது தொடர்பில் அரசியல்வாதிகள் தெரிவிக்கும் கருத்துகள் அவர்கள் யானையைப் பார்த்த குருடர்களின் நிலையில்தான் இருக்கின்றார்கள் என்பதையே வெளிப்படுத்தி நிற்கின்றன.**

**அதனை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் விவரித்திருக்கின்றார்.**

***"நாடாளுமன்றத்தில் பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து, தென்னிலங்கையில் மிகவும் மோசமான பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.***

***"தமிழர் பிரதேசத்தில் ஒரு வகையான பிரசாரம், முஸ்லிம் பிரதேசங்களில் இன்னுமொரு வகையான பிரசாரம், தென்னிலங்கையில் இனவாதத்தைத் தூண்டும் பிரசாரம் என்று இந்த நகல் அறிக்கை ஆளுக்கொரு விதத்தில் கூறுபோடப்படுகின்றது. ஒவ்வொருசாராரும் தமது அரசியல் இருப்புக்காகவும் ஆதாயத்துக்காகவும் இந்த விவகாரத்தைக் கையில் எடுத்துள்ளனர்."*** **– என்று சுட்டிக்காட்டுகின்றார் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்.**

**இதுதான் புதிய அரசமைப்பு முயற்சிகள் தொடர்பான உண்மைக் கள நிலைமை.**

**அவர் சுட்டிக்காட்டுகின்றமை போல ஆக நூறு எம்.பிக்களைக் கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே. கட்சித் தரப்பும், சுமார் எண்பத்தியைந்து எம்.பிக்களைக் கொண்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டு எதிரணித் தரப்பும் இந்தப் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவ அறிக்கையைத் தங்களின் அரசியலுக்கான பேசுபொருளாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாமே தவிர, அதில் வேறு முன்னேற்றம் கிட்டுவது என்பது துர்லபமே.**

**அதேசமயம், தற்போதைய அரசோ, ஜனாதிபதியோ, பிரதமரோ ஒரு தீர்வுத் திட்டத்தைத் தருவார்கள் என்ற நம்பிக்கை தமக்கு அடியோடு கிடையாது என்பதையும் ரிஷாத் பதியுதீன் திட்டவட்டமாத் தெரிவித்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது.**

**தாமும் ஒரு சிறுபான்மை இனத் தலைவர் என்ற முறையில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் தமிழர் தலைவர்கள் போல முழு ஈடுபாட்டுனும், நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் செயற்பட்டாரா, செயற்படுகின்றாரா என்பது வேறு விடயம். ஆனால் அவர் இப்போது குறிப்பிடும் மேற்படி நிலைமைதான் யதார்த்தபூர்வமான உண்மை. இந்தக் கள நிலைவரத்தை நாங்கள் புரிந்து கொண்டால்தான் – ஏற்றுக் கொண்டால்தான் – இவ்விடயத்தில் அடுத்த கட்டத்துக்குள் நாம் நுழைய முடியும்.**

**இனப் பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் தமிழர்கள் இதய சுத்தியுடனும், நேர்மையுடனும், அதீத விட்டுக் கொடுப்புடனும், பொறுமையுடனும் ஈடுபட்டார்கள் என்பதை சர்வதேச சமூகத்துக்கும் காட்ட வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் தமிழர்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் உள்ளன என்று தமிழ் தலைமை அடிக்கடி சுட்டிக்காட்டுகின்ற பொறுப்புணர்வை ஏற்றுக் கொள்கின்றோம்; அதனைப் புரிந்து கொள்கின்றோம்.**

**இந்த சமரச முயற்சிகளில் இருந்து விலகிக் கொண்டவர்கள் அல்லது அவற்றை நிராகரித்துப் புறந்தள்ளியவர்கள் தமிழர்கள் அல்லர் என்பதை எப்போதும் வெளிப்படுத்தி நிற்பதும் தமிழர் கடப்பாடு என்று தமிழ்த் தலைமைகளினால் சுட்டிக் காட்டப்படுகின்றமையையும் ஏற்றுக் கொள்கின்றோம்; புரிந்து கொள்கின்றோம்.**

**ஆனால் இந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தில் இனி சாத்தியமேயாகாத ஒன்று எனத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு முயற்சியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, அதையே நம்பி, அதையே சுற்றிச் சுற்றி வந்தபடி, அரசியல் செய்ய வேண்டிய தேவை தமிழருக்கு இல்லை. அப்படி அரசியல் செய்வது தமிழர் தரப்பைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லும் மூன்றாம் தர அரசியலாகவே சித்திரிக்கப்பட வேண்டியதாகும்.**

**தென்னிலங்கை அரசியல் களநிலைவரம் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான யதார்த்தத்திலிருந்து திரும்பி நீண்ட காலமாகி விட்டது. அந்த உண்மையைத் தமிழர் தரப்புக்கு வெளிப்படையாக எடுத்துணர்த்தி, அடுத்த கட்ட அரசியலுக்கு தமிழர் தரப்பைத் தயார்படுத்தவும், வழிப்படுத்தவும் அரசியல் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

**புதிய அரசமைப்பை ஏற்படுத்துவோம் என்று நமது மக்களுக்கு 2014 – 2015 காலப் பகுதியில் நாம் கொடுத்த வாக்குறுதிகள் – நம்பிக்கைகள் – தென்னிலங்கைத் தலைவர்களின் அரசியல் செல்நெறிகளாலும், நடவடிக்கைகளினாலும் தகர்ந்து போய் விட்டன என்ற உண்மையை நமது தமிழ் மக்களிடம் வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் தெரிவித்தால்தான் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு அவர்களைத் தயார்படுத்தலாம்; அடுத்த கட்ட நகர்வுகளைத் திட்டமிடலாம்.**

**உண்மை நிலையை – யதார்த்தப் புறச் சூழலை – நிஜத்தில் நிகழ்வதற்குச் சாத்தியமான அம்சங்களை – மக்களுக்கு எடுத்துரைத்து, அதன் மீது அரசியல் செய்தால் மட்டுமே இலக்கை எட்டும் வாய்ப்புகள் எமக்குக் கிடைக்கும்.**

**எட்டச் சாத்தியமே இல்லாத ஒன்றை மக்களுக்குக் காட்டியபடி, தமது அரசியல் வாக்கு வங்கிக்காக, அதனை நோக்கி நகருகிறோம் என மக்களை வழிப்படுத்துவது இறுதியில் அரசியல் அந்தகாரத்திலேயே முழு இனத்தையும் கொண்டுபோய் விட்டுவிடும்.**

**தென்னிலங்கை அரசியல் போக்கினால், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு இந்த அரசில் இனியும் இடமில்லை என்ற உண்மையை இனியாவது ஒப்புக் கொண்டு, மக்களுக்கு அதனை வெளிப்படையாகத் தெரிவித்து விட்டு, அதனடிப்படையில் அடுத்த கட்ட காய்களை நகர்த்தும் அரசியல் யதார்த்தத்துக்குத் தமிழ்த் தலைமை திரும்பவேண்டும்.**

**'அரசியலில் எதுவும் எந்த நேரத்திலும் நடக்கலாம்' என்று கூறிக் கொண்டு அந்த நம்பிக்கையில் பயனற்ற ஒரு பாதையை மட்டும் நம்பிப் பயணிப்பது அர்த்தமற்றது.**

**யதார்த்தத்தை ஒப்புக் கொண்டு, அதனடிப்படையில் புதிய பாதைக்கு – இலக்குக்கு – வியூகங்களை வகுப்பதே இன்று தமிழர் முன்னால் உள்ள ஒரே மார்க்கமாகும்.**

# யாழ்.நகரின் புறநகர்பகுதிக் காணிகளை சுவீகரித்து பெரும் குடியேற்றத் திட்டத்தை உருவாக்க முயற்சி

## காணி உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ் நகரின் புறநகர் பகுதியை இலக்குவைத்து பெரும் குடியிருப்பு திட்டமொன்றை உருவாக்க அதிகாரிகள் முயற்சித்து வருகின்றனர் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை பகுதியில் தமிழ்க்குடும்பங்களுக்குச்சொந்தமான 300 பரப்புக் காணியை அடாத்தாக சுவீகரிக்க முற்படுவதாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது கொழும்புத்துறை பகுதி மக்கள் நடமாடுவதற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் அங்கிருந்த குடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்து வந்தன.

இந்நிலையில்அக்காணிகள் உரிமை கோரப்படாத காணிகள் எனத் தெரிவித்து அதிகாரிகள் அவற்றை சுவீகரித்து வேறு புதிய குடியேற்றத் திட்டமொன்றை உருவாக்க முற்படுகின்றனர்எனச் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பயன்பாட்டில் இல்லாது அல்லது உரிமம் கோரப்படாமல் உள்ள காணிகளைச் சுவீகரித்து புதிய குடியேற்றத் திட்டங்களைமேற்கொள்வதற்கு மாவட்டச்செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த வகையில் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட கொழும்புத்துறை பகுதியில் பல காலமாக உரிமம் கோரப்படாது இருந்ததாக 300 பரப்புக் காணிகளைச் சுவீகரிப்பதற்கு அடையாளப்படுத்தியுள்ளனர்.

ஆனால் அதில் 80 பரப்புக் காணி தமக்குச் சொந்தமென்றும் தம்மிடம் அதற்கானஉறுதிப் பத்திரங்களும் இருக்கின்றன என அக் காணிகளின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ் மாவட்ட அரச அதிபரிடமும் அவர்கள் முறையிட்டுள்ளனர். அவ்வாறு அரச அதிபரிடம் இதனைக் கூறியபோது காணிகளைக் கொடுத்தால் நஷ்டஈடு தரலாம் என்றும் அரச அதிபர் கூறியிருக்கின்றார்.

ஆனால் தங்களுக்கு நஷ்டஈடுகள் எவையும் வேண்டாம் என்றும்தமது காணிகளேதமக்கு வேண்டுமென்றும் அக்காணி உரிமையாளர்கள் அரச அதிபரிடம் கூறியுள்ளனர். இதனையடுத்து உங்கள் காணிகளை தவிர்த்துஉரிமம் கோரப்படாத ஏனைய காணிகளை எடுத்துக் கொள்வதாக அரச அதிபர் தெரிவித்திருக்கின்றார். இதனையடுத்து தங்கள் காணிகள் சுவீகரிக்கப்படாதெனஅக்காணியின்உரிமையாளர்கள் நம்பியிருந்தனர்.

ஆனால் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் படி அங்கு அடையாளமிடப்பட்ட இந்த 80 பரப்புக் காணி உள்ளிட்ட காணிகளைச் சுவீகரிப்பதற்கான அளவீடு நேற்று 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட இருப்பதாக அக் காணி உரிமையாளர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசஅதிபர் மற்றும்பிரதேசசெயலர் உள்ளிட்ட பல தரப்பினர்களிடமும் முறையிட்டுள்ளனர். ஆனாலும் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. நாங்கள் இந்தக் காணிகளை நம்பியே உள்ளோம் இந்தக் காணிகளை பறிக்க வேண்டாமென்றும் கோரியுள்ளனர். இதனையும் மீறி குடியேற்றத்திற்காக தங்கள் காணிகளைச் சுவீகரிக்க தாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் குடியேற்றத்திற்காக தங்களது அனுமதி இல்லாமல் அரச அதிகாரிகள் தங்கள் காணிகளைச் சுவீகரிப்பதை நிறுத்தி தங்கள் காணிகளைதங்களிடமே ஒப்படைக்க வேண்டு மெனஅரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளிடமும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(எ)

# கஞ்சா தகவல் வழங்கிய மாணவனுக்கு அச்சுறுத்தல் பாடசாலையை விட்டு விலகும் பரிதாப நிலையில் அவர்

கிளிநொச்சி,ஜன.26

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய தேசிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்று வருகின்ற போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தில் கஞ்சா விற்பனை செய்பவரின் தகவலைபொலிஸாருக்குவழங்கிய மாணவன் பாடசாலைக்கு செல்ல முடியாத அளவுக்கு அச்சுறுத்தலுக்குள்ளாகி பாடசாலையை விட்டு விலகும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான்

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோணாவில் மகா வித்தியாலயத்தில் கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை இடம்பெற்ற போதைப்பொருள்ஒழிப்புவாரத்தில் ஒரு நாள் மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்துக்களை வழங்குவதற்கும் அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொள்வதற்கும் பொலிஸார் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது தரம் எட்டில் கல்வி கற்கின்ற மாணவன் ஒருவன் தனது வீட்டுச் சூழலில் கஞ்சா மற்றும் கசிப்பு விற்பனை இடம்பெறுகிறது என்றும், இதனால் தமக்கு பெரும் நெருக்கடி நிலைமை ஏற்படுகிறது என்றும் தெரிவித்திருந்தார். இதனையடுத்து தகவல் வழங்கிய மாணவனின் விவரங்கள் கஞ்சா விற்பனை செய்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் அந்த நபர் தகவல் வழங்கிய மாணவனை தாக்குவதற்கு முயற்சி செய்துள்ளதோடு, அவரின் உறவினர்களால் மாணவனின் வீடு தேடிச் சென்று அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபரினால் தனது மகன் எந்த வேளையும் தாக்கப்படலாம் என்ற காரணத்தினால் பெற்றோர் பாடசாலைக்கு கடிதம் ஒன்றை எழுதி வழங்கி விட்டு பாடசாலையிலிருந்து மாணவனை நிறுத்துவதற்கு தீர்மா னித்துள்ளனர்.

இந்த பரிதாப நிலையை கண்டு பாடசாலை சமூகம் கவலையடைந்துள்ளது. இவ்வாறு சிறு வயதிலேயே சமூக சீர்கேடுகளுக்கு எதிராக எழுந்து வரும் மாணவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றமை எதிர்காலத்தில் இம்மாணவன் போன்று ஏனையவர்கள் துணிந்து செயற்பட முடியாத நிலை ஏற்பட்டு விடும் என்றும் எனவே இந்த மாணவனின் பாதுகாப்புக்கு உரிய தரப்பினர் உத்தர வாதம் வழங்குவதோடு, சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மாணவன் தற்போது வீட்டுச் சூழலிலும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றான் எனத் தெரிவிக்கப்படுகிறது. உனக்கு ஏன் தேவையில்லாத வேலை என்று பலரும் மாணவனிடம் கடிந்து கொள்வதனால் இந்த தரம் எட்டு மாணவன் மனதளவிலும் பாதிக் கப்பட்டுள்ளான் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(எ)

## 'இன்கிலாப் - 08' நூல் வெளியீடு

யாழ். பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஷன் "இன்கிலாப் 08 " நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் டாக்டர் ஏ. இராசகுமாரன், பேராசிரியர் எஸ்.சிறி சற்குணராஜா ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக மஜ்லிஸின் முன்னாள் பொதுச் செயலாளர் ஜபர் ஸாதிக் மற்றும் பல்கலைக்கழகத்தின் நூலகர், அனைத்துப் பீடங்களின் பீடாதிபதிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

"முகமது நபி (ஸல்) அவர்களின் முழு சமுதாயத்திற்கும் கிடைத்த அருட்கொடை" எனும் கருப்பொருளில் 'இன்கிலாப் 08' நூல் வெளியிடப்படவுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு மஜ்லிஸ் செயலாளர் றுமைஸ்றாசூல்0773531000, பத்திராதிபர்எம்.எம்.ஸகி-0775005973 ஆகியோருடன் தொடர்பு கொள்ளலாம். (இ - 19)

## நாளை

**27.01.2019**
**ஞாயிற்றுக்கிழமை**

நட்சத்திரம் : சித்திரை மு.இ 8.39 வரை
திதி : ஸப்தமி மு.இ 9.37 வரை
சுபநேரம் : 9.36 - 11.06 வரை
இராகுகாலம் : 5.06 - 6.36 வரை

# வடக்கு மாகாண கல்வித்துறையில் தொடர்ந்தும் நீடிக்கும் மர்மங்கள்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேதனை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.26

வடமாகாணகல்வித்துறையில்மர்மங்கள்நீடிக்கின்றன. பணிப்பாளர்கள் இல்லை. அதிபர்கள் இல்லை. ஆசிரியர்கள் இல்லை! இதுவே இன்றைய வடமாகாண கல்வியின் நிலை என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

வடக்கு மாகாணத்தில் உள்ள பிரதானமான யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடம் நிரப்பப்படாமல் ஒரு வருடத்தை நெருங்குகின்றது. இவ்வலயத்துக்கு பணிப்பாளரை நியமனம் செய்யாமல் இழுத்தடிப்பதில் மர்மம் இருப்பதாகத் தெரிகின்றது.

இது இவ்வாறு இருக்க வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் இருவர் இன்னும் நியமிக்கப்படவில்லை. வடபுலத்துக் கல்வியை வழிப்படுத்துகின்ற வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இவ்வாறு பொறுப்பு வாய்ந்த மேலதிக பணிப்பாளர்கள் இல்லாதிருக்கின்றமை பெரும் பின்னடைவாகும்.

இந்த வெற்றிடம் நீண்டநாள்களாக நீடிக்கின்றது. இதற்குப் பொருத்தமானவர்கள் வடக்கு மாகாணத்தில் இல்லையென்றால் பிற மாகாணங்களில் இருந்தாவது நியமிக்க வேண்டும். இவ்விடயங்கள் பல தடவைகள் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அண்மையில் வடபுலத்துக் கல்வியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போதாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்திருந்தார்.

இத்தகைய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர்கள் வெற்றிடம், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் வெற்றிடம் என்பன ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனவா? என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பணிப்பாளர் நியமனம் தொடர்பில் பல தடவைகள் நாம் வலியுறுத்தியும், பல தடவைகள் வாக்குறுதிகள் வழங்கியும் இன்னும் நியமனம் நடைபெறாமல் இருக்கின்றமை பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

இவ்விடயங்களில் ஆளுநர் தலையீடு செய்து உடனடியாக நியமனங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# பெப்.3 இல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.இன் பிராந்திய மாநாடு

(எஸ்.நிதர்ஷன்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதான பிராந்திய மாநாடு பெப்ரவரி 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கட்சியின் அரசியல் பீட உறுப்பினர் கலாபூசணம் க.அருந்தவராசா தலைமையில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் விசேட விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சீ.வீ.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

மாநாட்டில் சிறப்பு விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், அக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன், கட்சியின் உப தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான இரா.துரைரட்ணம், கட்சியின் பொருளாளரும் மன்னார் நகர சபையின் உறுப்பினருமான சம்பூரணம் இரட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாநாட்டில் வரவேற்புரையை கட்சியின் வலிகிழக்கு பிரதேசசபை உறுப்பினர் இராசதுரை கோமதி, தலைமையுரையை கட்சியின் அரசியல் பீட உறுப்பினர் க.அருந்தவராசா, பிராந்திய அறிக்கையை கட்சியின் உப செயலாளரும் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சருமான கலாநிதி சர்வேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நிகழ்வில் அதிதிகள் உரையை முன்னாள் வல்வெட்டித்துறை நகர சபையின் நகரபிதா ந.அனந்தராஜ்,, கட்சியின் வடமராட்சி இணைப்பாளர் மருத்துவர் சிங்கவாகு சிவக்குமார், கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் குஞ்சித்தம்பி தினேஷ், வலிதெற்கு இணைப்பாளர் குழந்தைவேலு சிறீரங்கன், வலி வடக்கு இணைப்பாளர் மயில்வாகனம் சிவகுமாரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஏ)

# காரைநகர் பிரதேச செயலரின் வாகனம் விபத்தில் சிக்கியது



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.26

காரைநகர் பிரதேச செயலரது வாகனம் காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் இருந்த தொலைத் தொடர்பு கம்பத்தின் மீது மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் நேற்றுமுன்தினம் புனரமைப்பு செய்யப்பட்டு திறப்பு விழா செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தொண்டமனாறு பாடசாலை மரதன் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.26

யா/தொண்டமானாறு வீரகத்தி பிள்ளை மகா வித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகளை முன்னிட்டு வீதியோட்டப் போட்டி (மரதன்) கடந்த 19.ஆம் திகதி காலை இடம்பெற்றது.

ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை த.ராஜ்குமார், இரண்டாம் இடத்தை சி. யுவராஜ்,மூன்றாம் இடத்தை அ. தருண்ராஜ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை கா.சயிதா, இரண்டாம் இடத்தை த. தனுசியா, மூன்றாம் இடத்தை வி. சயிந்தா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மரதன் ஓட்டத்தைத் தொடர்ந்து போட்டியில்




வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் பாடசாலை வளாகத்தில் வைத்து வழங்கப்பட்டன. 50இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளுக்கு நூல்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி,ஜன.26

சிறகுகள் அமையத்தின் படிப்பகம் செயற்றிட்டம் ஊடாக கிளிநொச்சி அழகாபுரி வித்தியாலய நூலகத்துக்கு நூல்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி உதவியினை யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையைச் சேர்ந்த 91மாணவிகள் வழங்கியிருந்தனர்.

சிறகுகள் அமையத்தின் இந்தச் செயற்றிட்டம் ஊடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை மாவட்டங்களில் 15 பாடசாலை நூலகங்களுக்கான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.



ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வாசிப்பு ஆற்றலை விருத்திசெய்யும் வகையில் உருவாக்கப்பட்ட படிப்பகம் செயற்றிட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

# இலங்கை செஞ்சிலுவை தொண்டர்களுக்கு திருமலையில் திறன் விருத்தி பயிற்சிநெறி

திருகோணமலை,ஜன.26

அனர்த்த அவசர நிலைமைகளின் போது இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் இடைத்தங்கல் முகாம்களில் சிறந்த முறையில் முகாமை செய்வதற்கான திறன் விருத்தி பயிற்சி நெறி நேற்றுமுன்தினம் (24) திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் நிதி உதவியுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட கிளையால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்செயலமர்வு கால்நடை உற்பத்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட பயிற்சி நிலையத்தில் இடம்பெற்று வருகின்றது.



நேற்று முன்தினம் ஆரம்பமான (24 ஆம் திகதி) இப்பயிற்சி நெறி இன்று சனிக்கிழமை வரை இடம்பெற உள்ளதாக திருகோணமலை மாவட்ட கிளை நிறைவேற்று உத்தியோகத்தர் எஸ். சுஜீவன் தெரிவித்தார்.

இச்செயலமர்வில் அனர்த்த அவசர நிலைமைகளின்போது இடம்பெயர்ந்த மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கி வாழும் வேளை அம்மக்களை எவ்வாறு முகாமை செய்வது என்பது பற்றியும் தாங்கள் கிராம மட்டங்களில் எவ்வாறு மக்களை மதித்து தொண்டர் சேவைகள் செய்வது பற்றியும் தெளிவூட்டப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட கிளைத் தலைவர் பீ. முரளிதரன், முன்னாள் நிறைவேற்று அதிகாரி டொக்டர் என். ரவிச்சந்திரன், அனர்த்த முகாமைத்துவ உதவி முகாமையாளர் தமித ஞானக மற்றும் வளவாளர்களாக மட்டக்களப்பைச் சேர்ந்த வீ. பிரேம்குமார், வவுனியாவைச் சேர்ந்த ரொனால்ட் சிறிகாந் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஏ)

# இன்றைய 69 ஆவது குடியரசு தினவிழாவில் வெளிப்படுத்தப்படவுள்ள இராணுவ வலிமை



புதுடில்லி,ஜன.26

டில்லி ராஜ்பாத்தில் இன்று நடைபெறும் 69 ஆவது குடியரசு தின அணிவகுப்பில் முதன் முதலாக நவீன ஆயுதங்கள் இடம்பெறவுள்ளன.

இந்தியாவின் 69 ஆவது குடியரசு தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இந்த குடியரசு தின விழாவில் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ராமபோசா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெறும் அணி வகுப்பு மரியாதையில் இந்திய தேசிய இராணுவ (ஐ.என்.ஏ) வீரர்கள் முதல் தடவையாக பங்கேற்கிறார்கள். முதன்முதலாக பெண்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் இந்த ஆண்டு குடியரசு தின அணிவகுப்பு வரலாற்றில் இடம் பெறும்.

ராஜபாத்தில் காலை 10 மணிக்கு தொடங்க உள்ள இந்த அணி வகுப்பு 90 நிமிடம் நடைபெறும். இந்த அணிவகுப்பில் முதல் முறையாக 98 முதல் 100 வயதுடைய 4 ஐ.என்.ஏ. வீரர்கள் பங்கேற்கிறார்கள்.

ஜட்ரபா ஆலையில் இருந்து பெறப்பட்ட உயிரி எரிபொருள், பயன்படுத்தப்படும் AN32 என்ற வானூர்தி முதல் தடவையாக குடியரசு தின அணிவகுப்பில் பங்கு பெறுகிறது.

ஷாங்க்நாத், இந்திய ஆயுதப் படையினருக்காக உருவாக்கப்பட்ட ஒரு பாடலானது குடியரசு தின அணிவகுப்பில் முதல் முறையாக ஒளிபரப்பப்படுகிறது.

இந்த ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் பெண்கள் பங்கேற்பு மிக அதிகமாக இருக்கும்.

அமெரிக்காவில் இருந்து வாங்கப்பட்ட M-77 A2 அல்ட்ரா லைட் ஹோவிட்சர் (ULH) போன்ற சமீபத்திய நவீன ஆயுதங்கள் அணிவகுப்பில் இடம் பெறும். இதன் மூலம் இந்தியா தனது இராணுவ வலிமையை வெளிப்படுத்தும்.

(ஏ)

பி.எஸ்.எல்.வி ராக்கெட் செலுத்தப்பட்டமை

## விஞ்ஞானிகளுக்கு மோடி பாராட்டு



புதுடில்லி,ஜன.26

பி.எஸ்.எல்.வி ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் ஏவியதற்காக விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் 1 ஆவது ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி.-சி.44 ராக்கெட் நேற்று முன்தினம் இரவு 11.40 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

2 செயற்கைக்கோள்களும் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டமையைத் தொடர்ந்து, இஸ்ரோ விஞ்ஞானிகள் ஒருவருக்கொருவர் கைகுலுக்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பிஎஸ்எல்வி மூலம் 2019-ஆம் ஆண்டில் முதல் பயணத்தை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளதாகவும், இந்த வருடம் 32 ராக்கெட்களை ஏவ திட்டமிட்டுள்ளதாகவும் இஸ்ரோ தலைவர் சிவன் குறிப்பிட்டார்.

பி.எஸ்.எல்.வி ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் ஏவியதற்காக விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டுக்களை தெரிவித்துள்ளார். தனதுடுவிட்டரில் பிரதமர் மோடி இந்த பாராட்டுச் செய்தியை வெளியிட்டுள்ளார். மோடி கூறுகையில் திறமை வாய்ந்த இந்திய மாணவர்களின் கலாம்-சாட் செயற்கைக்கோள் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. புவிசுற்று வட்டப்பாதையில் 4வது நிலையை பயன்படுத்தி செயற்கைக்கோள்களை அனுப்பிய முதல் நாடு இந்தியா என தெரிவித்துள்ளார்.

## மனைவியைக் கொலை செய்ய விடுப்பு கேட்ட வங்கி மேலாளர்!

### அதிர்ந்து போயினர் அதிகாரிகள்!!

பட்னா,ஜன.26

மனைவியை கொலை செய்ய 2 நாள் விடுப்பு கொடுங்கள் என வங்கி மேலாளர் கடிதம் எழுதியதால் அதிகாரிகள் அதிர்ந்துபோயினர்.

பீகார் மாநிலம் பக்ஸரை சேர்ந்தவர் முன்னா பிரசாத். இவர் வங்கியில் முகாமையாளராக வேலை பார்த்து வருகிறார். சிறுநீரக பிரச்சினை காரணமாக இவரது மனைவி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மனைவியை அருகிலிருந்து கவனித்துக் கொள்ள முன்னா அவ்வப்போது விடுப்பு எடுத்து வந்துள்ளார்.

அப்படி மனைவியை கவனித்துக் கொள்ள விடுப்பு வேண்டும் என முன்னர் உயரதிகாரிகளிடம் கேட்டுள்ளார். ஆனால் அவர்கள் விடுப்பு தர முடியாது என கூறிவிட்டனர்.

இதனால் மனமுடைந்த முன்னா, தனது மனைவியை கொலை செய்து, அவருக்கு இறுதிச் சடங்கு செய்ய 2 நாட்கள் விடுப்பு தேவை என கடிதம் எழுதி அதனை தனது உயரதிகாரிகளுக்கும், பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துவிட்டார்.

இதனைப்பார்த்து அதிர்ந்துபோன அதிகாரிகள் நீங்க எத்தனை நாள் வேண்டுமானாலும் விடுப்பு எடுத்துக் கொள்ளுங்கள் என கூறிவிட்டனராம்.

இந்நிலையில் தனது செயலுக்கு விளக்கமளித்த முன்னா, எனது மனைவியை கவனித்துக் கொள்ள ஆள் இல்லை. அவளை பார்க்க விடுப்பு கேட்டால் கொடுக்க மறுக்கிறார்கள். அந்த விரக்தியில் தான் இப்படி கடிதத்தை எழுதினேன் என கூறினார்.

## தமிழக அரசியலில் முதலில் ஊழல் ஒழிக்கப்படவேண்டும்

கல்லூரி விழாவில் கமல்

சென்னை,ஜன.26

தமிழக அரசியலில் முதலில் ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என மக்கள் நீதி மய்ய தலைவர் கமல்ஹாசன் கூறினார்.

சென்னையில் கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் பேசுகையில் -

தமிழ்நாடு தக்கையாக உள்ளது, அதனை மீண்டும் முழு உருவம் பெறச் செய்வது முதல் தலைமுறை வாக்காளர்கள், இளைஞர்கள் கையில் உள்ளது.

தமிழக அரசியலில் முதலில் ஊழல் ஒழிக்கப்பட வேண்டும். நாற்காலி கிடைத்ததும் மக்களை புறம் தள்ளாமல் மக்களுக்காக, மக்கள் நலனுக்காக அரசு செயல்பட வேண்டும்.

நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் நீதி மய்யம் சிறப்பாக செயல்படும் பட்சத்தில் மாற்றம் நிச்சயம் .திருட்டை குறைத்தால் மக்களுக்கான தேவைகள் பூர்த்தியாகும்.

காவிரிக்காக போராடுதல் அவசியம், காவிரி தமிழகத்தில் பாய வேண்டும் என்பது இயற்கையின் நீதி. வாக்குக்கு லஞ்சம் வாங்க கூடாது என இளைஞர்கள் உறுதி ஏற்க வேண்டும்.

மக்களவை தேர்தலில் போட்டியிட முடியாது என சொல்லிவிட முடியாது. நிலைமையை பொருத்து முடிவு எடுக்கப்படும் எனக் கூறினார்.

## பிரியங்கா அழகாக இருப்பதால் மட்டும் வாக்குகளை பெற்றுவிட முடியாது

பீகார் அமைச்சர் சர்ச்சை பேச்சு



பட்னா,ஜன.26

பிரியாங்கா காந்தி வதேரா அழகாக இருக்கின்றமையால் மட்டும் வாக்குகளை வென்று விட முடியாது என்று பிஹார் மாநில அமைச்சர் ஒருவர் சர்ச்சையாகப் பேசியுள்ளார்.

நேரடி அரசியலில் ஒதுங்கி இருந்த பிரியங்காகாந்திவதேரா காங்கிரஸ்பொதுச்செயலாளராக அறிவிக்கப்பட்டு உ.பி. மாநில கிழக்கு பிராந்தியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் இந்த முயற்சியையும், பிரியங்கா காந்தியின் வருகையையும் அனைத்து காங்கிரஸ் தொண்டர்களும் வரவேற்றுள்ளனர். புத்துணர்ச்சியும் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், பிஹார் மாநிலத்தின் அமைச்சராக இருக்கும்வினோத்நாராயண்ஜா பிரியங்காகாந்தி வதேராவை சர்ச்சைக்குரிய வகையில் விமர்சித்துள்ளார்.

அவர் ஏஎன்ஐ நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், பிரியங்கா காந்தி மிகவும் அழகானவர். அழகானமுகத்தை வைத்திருந்தால், மட்டும் வாக்குகளை வென்றுவிட முடியாது.

அதுமட்டுமல்லாமல் ஊழலில்சிக்கியராபர்ட்வதேராவின் மனைவி பிரியங்கா காந்தி. ராபர்ட் மீது ஏராளமான ஊழல் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. பிரியங்கா அழகாக இருந்தாலும், அரசியல்ரீதியாக சாதிக்கவும் இல்லை, அரசியல் அறிவும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

## ரேபரேலி தொகுதியில் பிரியங்கா போட்டி?



புதுடில்லி,ஜன.26

ரேபரேலி தொகுதியில் எம்.பி. ஆக உள்ள சோனியாகாந்திக்கு 5 தடவையும் தேர்தல் பணி செய்தது பிரியங்காதான் என்பதால் இந்த தொகுதியில் பிரியங்காவை போட்டியிட வைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேரடி அரசியலுக்கு வந்துள்ள பிரியங்காவை வருகிற நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட வைக்க வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர்கள் இப்போதே அழைப்பு விடுக்கத் தொடங்கியுள்ளனர். இதைத் தொடர்ந்து பிரியங்காவை எந்த தொகுதியில் களம் இறக்கலாம் என்ற ஆலோசனை நடந்து வருகிறது.

பிரியங்காவை பொறுத்தவரை அவர் உத்தரபிரதேசத்தில் உள்ள அமேதி, ரேபரேலி ஆகிய இரு தொகுதிகளுடன் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக நல்ல தொடர்பில் இருப்பவர். அந்த இரு தொகுதிகளிலும் அவருக்கு அபரிதமான செல்வாக்கு இருக்கிறது.

சோனியாகாந்தி ரேபரேலி தொகுதியில் எம்.பி. ஆக உள்ளார். ஆனால் உடல் நலக்குறைவு காரணமாக இந்த தடவை அவர் தேர்தலில் போட்டியிட மாட்டார் என்ற பேச்சு நிலவுகிறது. இத்தகைய சூழ்நிலையில் ரேபரேலி தொகுதியில் பிரியங்காவை போட்டியிட வைக்கலாம் என்று நினைக்கிறார்கள்.

ரேபரேலி தொகுதியில் பிரியங்காவின் வெற்றி 100 சதவீதம் உறுதியானதாகும். அத்தகைய சூழ்நிலையில் அவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள 40 தொகுதிகளிலும் தீவிர கவனம் செலுத்த முடியும் என்று கூறப்படுகிறது.

# அரசுத்துறை முடக்கத்தை முடிவுக்கு கொண்டுவர ட்ரம்ப் மேற்கொண்ட புதிய முயற்சியும் தோல்வி

அரசு நிர்வாக முடக்கத்தை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மேற்கொண்ட புதிய முயற்சியும் தோல்வியைச் சந்தித்துள்ளது.

சட்டவிரோத குடியேறிகளை தடுக்க மெக்சிக்கோ எல்லையில் பாதுகாப்பு சுவர் அமைப்பதற்கு 570 கோடி டொலர் நிதி ஒதுக்கும்படி ஜனாதிபதி டிரம்ப் நாடாளுமன்றத்தில் முறையிட்டார். ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ட்ரம்ப் கேட்ட தொகையை அளிக்க மறுத்துவிட்டனர்.

அதன் காரணமாக கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக அமெரிக்காவில் முக்கிய அரசு துறைகள் முடங்கின. இதனால் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் சம்பளமின்றி தவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில், அரசு நிர்வாக முடக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக, எல்லை சுவர் கட்டுவதற்கான நிதி கோரும் பிரேரணை உட்பட 2 பிரேரணைகள் தாக்கல் செய்யப்பட்டன.



ஆனால், இரண்டு பிரேரணைகளும் நிறைவேறுவ தற்கான தேவையான 60 வாக்குகளை பெற முடியாமல் தோல்வியை எட்டின. இதனால், அரசு நிர்வாக முடக்கம் அமெரிக்காவில் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இதேவேளை அரசுத்துறைகள் முடக்கம் முடிவுக்கு வரும் வரை நாடாளுமன்றத்தில் உரையாற்ற மாட்டேன் என டிரம்ப் தெரிவித்துள்ளார்.

(ஏ)

## பல நூற்றாண்டு பிரச்சினையை தீர்க்கவுள்ள புதிய 1.9 கிலோ மீற். பாலம்

செனிகர்,ஜன.26



மேற்கு ஆபிரிக்காவில் காம்பியா நதி மீது கட்டப்பட்டுள்ள புதிய பாலம் பல தசாப்தங்களாக இருந்து வந்த போக்குவரத்து நெரிசல் பிரச்சினையை நீக்குவதோடு, வணிகத்தையும் பெருக்கவுள்ளது.

நதியின் இரு பக்கங்களிலும் இருக்கும் நிலம் காம்பியா. செனிகர் நாட்டின் மூன்று பக்கங்களையும் இந்த நதியே சூழ்ந்துள்ளது. இரண்டு பக்கங்களிலும் இருக்கும் காம்பியா நாட்டை இந்த பாலம் இணைப்பதோடு, செனிகலின் வடக்கு பகுதியில் இருந்து தென் செனிகல் மாகாணத்தையும் இந்த 1.9 கிலோ மீற்றர் பாலம் இணைக்கிறது.

தற்போது திறக்கப்பட்டுள்ள இந்த புதிய பாலத்தில் கார் போன்ற வாகனங்கள் செல்ல 5 டொலர்கள் கட்டணம் வசூலிக்கப்படும். பாரவூர்தி போன்ற பிற கனரக வாகனங்கள் வரும் ஜூலை மாதம் முதல் இதில் செல்லலாம்.

## இந்தோனேசிய வெள்ளம், நிலச்சரிவு; பலியானோர் 26 ஆக அதிகரிப்பு

ஜகார்த்தா,ஜன.26



இந்தோனேசியாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.


இந்தோனேசியா மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த பகுதியாகும். இதன் தெற்கு சுலவேசி மாகாணத்தில் நேற்றுமுன்தினம் காலை கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. வெள்ளத்தால் தென் சுலவேசியில் வீடுகள், பாலங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த துயரச் சம்பவத்தில் சிக்கி 6 பேர் பலியாகினர் என்றும், 10 பேர் காணாமல் போய் விட்டனர் என்றும் முதல் கட்ட தகவல் வெளியானது.

இந்நிலையில், இந்தோனேசியாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 26 ஆக அகரித்துள்ளது. இதில் 2 குழந்தைகளும் அடங்கும்.

மேலும், காணாமல் போன 24 பேரை தேடி வருகின்றனர். சுமார் 3 ஆயிரத்து 321 குடும்பத்தினர் பாதிக்கப்பட்டு உள்ளனர். 46 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## மலேசியாவில் புதிய மன்னர் 31 ஆம் திகதி பதவியேற்கிறார்



மலேசியாவின் புதிய மன்னராக சுல்தான் அப்துல்லா தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர் வரும் 31ஆம் திகதி பதவியேற்க உள்ளார்.

மலேசியா மன்னராக கடந்த 2016 ஆம் ஆண்டு இறுதியில் பதவியேற்ற மன்னர் ஐந்தாம் சுல்தான் முஹம்மது, தனது பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகவே கடந்த 6 ஆம் திகதி பதவி விலகினார்.

கடந்த ஆண்டு மருத்துவ விடுப்பில் சென்ற மன்னருக்கு, ரஷ்ய தலைநகரான மொஸ்கோவில் ஒரு முன்னாள் மிஸ் மொஸ்கோ அழகியுடன் திருமணம் நடந்ததாக சமூக ஊடகங்களில் புகைப்படங்கள் வெளியாகின. இந்த தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில் மன்னரின் ராஜினாமா அமைந்துள்ளதாக கருதப்படுகிறது. ஆனால், இந்த வதந்திகள் தொடர்பாக மன்னரின் அரண்மனை வட்டாரங்கள் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

அவ்வகையில், மன்னர் ஐந்தாம் சுல்தான் முஹம்மது பதவி விலகியதைத் தொடர்ந்து, அடுத்த மன்னரைத் தேர்ந்து எடுப்பதற்கான நடைமுறை தொடங்கியது. இதற்காக நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில், சுல்தான் அப்துல்லா சுல்தான் அஹமது ஷா, புதிய மன்னராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நாட்டின் 16வது மன்னர் ஆவார். புதிய மன்னர் சுல்தான் அப்துல்லா, ஜனவரி 31 ஆம் திகதி பதவியேற்க உள்ளார்.

விளையாட்டில் அதீத ஆர்வம் கொண்ட சுல்தான் அப்துல்லா, உலக கால்பந்து அமைப்பான பிபா உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு அமைப்புகளில் பொறுப்பு வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஆஸியை வாட்டுகிறது வெப்பம்; 44 பேர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை

### 90 குதிரைகளும் மாண்டன

ஆஸ்திரேலியாவில் வெப்பக்காற்றின் தாக்குதல் கடுமையாக இருப்பதால் மக்கள் பலவிதமான வெப்ப நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். இதுவரை 44 பேர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



ஆஸ்திரேலியாவில் தற்போது கோடை காலம் தொடங்கியுள்ளது. இதனால் அங்கு கடும் வெப்பம் நிலவுகிறது. தெற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்ட் நகரிலும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் வெயில் வாட்டுகிறது.

அடிலெய்ட் வடக்கு பகுதியில் நேற்றுமுன்தினம் 49.5 டிகிரி செண்டிகிரேட் வெப்பம் பதிவாகியுள்ளது. அடிலெய்ட் நகரில் 47.7 டிகிரி பதிவானது. இது 1939 ஆம் ஆண்டில் பதிவான வெப்பத்தை விட அதிகம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதே நிலை தெற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள 13 நகரங்களில் நிலவுகிறது. வெப்பத்தின் கடுமையில் இருந்து தப்பிக்க மக்களுக்கு குளிர்ச்சியான பீர் இலவசமாக வழங்கப்படுகிறது. மக்கள் மர நிழலில் தஞ்சமடைந்துள்ளனர். கடும் வியர்வையில் இருந்து தப்பிக்க குளிர்சாதன வசதிகளையும் பயன்படுத்தி வருகின்றனர்.

வெப்பக்காற்றின் தாக்குதல் கடுமையாக உள்ளது. இதனால் பலவிதமான வெப்ப நோய்களுக்கு மக்கள் ஆளாகியுள்ளனர். இதுவரை 44 பேர் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வெப்பக்காற்று தாக்குதலால் தெற்கு ஆஸ்திரேலியாவில் 90 குதிரைகள் இறந்தன. பல உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. பருவ நிலை மாற்றம் காரணமாக வெயிலின் தாக்கம் அதிகமாகி இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## 14 வருடம் கோமாவில் இருந்த பெண்ணுக்கு குழந்தை பிறந்தமை தொடர்பில் ஆண் தாதி கைது

வொஷிங்டன்,ஜன.26

மருத்துவமனையில் 14 ஆண்டுகளாக கோமாவில் இருந்த பெண்ணுக்கு குழந்தை பிறந்த விவகாரத்தில் ஆண் தாதியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் பீனிக்ஸ் நகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் 29 வயதான பெண் ஒருவர், 14 ஆண்டுகளாக கோமா நிலையில் சிகிச்சைபெற்று வருகிறார். யாரும் எதிர்பாராத வகையில் அவருக்கு கடந்த மாதம் 29 ஆம் திகதி குழந்தை பிறந்தது. 14 ஆண்டுகளாக கோமாவில் இருந்த பெண்ணுக்கு குழந்தை பிறந்தது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பெண் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி இருக்கலாம் என்ற கோணத்தில் பொலிசார் விசாரணையை தொடங்கினர். இதனையடுத்து மருத்துவமனையில் சோதனை மற்றும் விசாரணையை பொலிஸ் மேற்கொண்டது.

உண்மையை கண்டறிவதற்காக மருத்துவமனையில் பணியாற்றும் அனைத்து ஆண்களும் டி.என்.ஏ. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.



அப்போது கோமாவில் இருந்த பெண்ணுக்கு குழந்தை பிறந்ததற்கு ஆண் தாதியர் ஒருவரே காரணம் என தெரியவந்துள்ளது. மருத்துவமனையில் ஆண் தாதியாக பணியாற்றும் நாதன் சுதர்லாந்த் (36) என்பவர் தான், கோமாவில் இருந்த பெண்ணை பலாத்காரம் செய்து கர்ப்பமாக்கினார் என்பது டி.என்.ஏ. பரிசோதனை மூலம் தெரியவந்தது.

இதையடுத்து பீனிக்ஸ் நகர பொலிசார் அவரை கைது செய்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி விடயத்தில் அநீதி

## தகுதியற்றவர் மஹிந்த; தவறிழைத்துள்ளார் சபாநாயகர் சபையில் கேள்விகளைத் தொடுத்து சீறினார் சம்பந்தன்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவரின் உரையின் முழு விவரம் வருமாறு: –

பொது முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் பின்வரும் கேள்விகளை எழுப்புவதற்கு சபாநாயகரான தங்களது அனுமதியை வேண்டி நிற்கிறேன்.

1. எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பில் நீங்கள் டிசம்பர் 18ஆம் திகதி 2018 அன்று நாடாளுமன்றில் ஓர் அறிக்கையை கொடுத்திருந்தீர்கள். அந்த அறிக்கையில், நாடாளுமன்றத்தில் இரண்டாவது அதிகப்படியான உறுப்பினர்களைக் கொண்டுள்ளதாகக் கூறப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர், மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு கடிதம் மூலம் வேண்டியிருந்ததாக நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். மேலும், நாடாளுமன்றத்தில் இரண்டாவது அதிகப்படியான உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அந்தக் கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்திருந்தீர்கள்.

2. சில உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பில் கேள்விகளை எழுப்பியிருந்தனர், அவற்றுள் முதலாவது, கேள்விக்கிடமின்றி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் இரண்டாவது அதிகூடிய உறுப்பினர்களைக்கொண்டுள்ளபோதும், அரசில் அவர்கள் ஓர் அங்கமாக இருப்பதன் காரணமாக, அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியினை வகிக்க முடியாது எனவும், இரண்டாவதாக, எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ, இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 99 உப பிரிவு 13 அ வின் பிரகாரம், தேர்தலின்போது அவரது பெயரை முன்மொழிந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகி முற்றிலும் வேறுபட்ட பொதுஜன பெரமுன அரசியல்கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுள்ளார். அவ்வாறு அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகி 30 நாள்கள் கடந்துள்ள நிலையில், அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையும் இரத்தாகியுள்ளது. எனவே அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கு முடியாது என்பவையாகும். இந்தக் கேள்விகளுக்கு நீங்கள் பிறிதொரு நாளில் பதில் தருவதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

3. இது தொடர்பில் கடந்த டிசெம்பர் 19 ஆம் திகதி நாடாளுமன்றில் நான் பேசியிருந்தேன். எனது உரையிலே மேற்குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் தொடர்பிலும் நான் குறிப்பிட்டிருந்தேன். மேலும், அந்த உரையில், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியிலுள்ள இரண்டாவது பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான என்னை 2015 செப்ரெம்பரில் நீங்கள் எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரித்ததையும், மேலும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியிலுள்ள இரண்டாவது பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரான என்னை 2018 ஒகஸ்ட்டில் மீண்டுமொரு முறை எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரித்திருந்தமையையும் குறிப்பிட்டிருந்தேன்.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் நாடாளுமன்றின் எதிர்க்கட்சியிலுள்ள அதிக உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசிலும் அங்கம் வகித்திருந்த காரணத்தினால்தான் நாடாளுமன்றில் எதிர்க்கட்சியில் இராண்டாவது பெரும்பான்மை கட்சியின் தலைவரை எதிர்க் கட்சித் தலைவராக நீங்கள் அங்கீகரித்திருந்தீர்கள்.

4. உங்கள் சார்பில் பிரதிச் சபாநாயகர் இம்மாதம் அதாவது ஜனவரி 8ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். மேற்குறித்த விடயம் தொடர்பில் தங்களது நிலைப்பாட்டினை அவர் அறிவித்திருந்தார்.

அந்த அறிக்கையிலே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிப்பதனால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பதற்கு தகுதியற்றது என்பது தொடர்பில் எவ்வித குறிப்பும் காணப்படவில்லை.

ஆகையினாலே, நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியில் இரண்டாவது பெரும்பான்மை கொண்ட கட்சியின் தலைவரான என்னை இரண்டுமுறை முதலாவது 2015 செப்டெம்பர், இரண்டாவது 2018 ஒகஸ்ட் ஆகிய தடவைகளில் எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரித்தமைக்கான மிக முக்கிய காரணம் தொடர்பில் கவனம்செலுத்துவதில் நீங்கள் தவறிழைத்துள்ளீர்கள்

5. மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு விடயங்கள் தொடர்பிலும் தங்களது தகவலுக்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுவது எனது கடமை என நான் கருதுகிறேன்.

a. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் யாப்பின் 30ஆவது உறுப்புரைக்கமைய குடியரசின் ஜனாதிபதி நாட்டின் தலைவராகவும், நிறைவேற்று தலைவராகவும், அரசின் தலைவராகவும், இருக்கிறார்.

b. இலங்கை ஜனநாயக சோலிசக் குடியரசின் யாப்பின் உறுப்புரை 42 உப பிரிவு 1,2 மற்றும் 3இன் பிரகாரம்,

1. குடியரசு அரசை வழிநடத்துவதற்காகவும் கட்டுப்படுத்துவதற்காகவும் ஓர் அமைச்சரவை இருத்தல் வேண்டும்.

2. அமைச்சரவை அமைச்சர்கள் கூட்டாக நாடாளுமன்றுக்குப் பொறுப்புக்கூறவும் பதிலளிக்கவும் வேண்டும்.

3. ஜனாதிபதி அமைச்சரவையின் அங்கத்தவராகவும் அமைச்சரவையின் தலைவராகவும் காணப்படுவார்.

6. மேலே 5ஆவது பந்தியிலே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின் அடிப்படையில், குடியரசின் ஜனாதிபதி நிறைவேற்று தலைவராகவும், அரசின் தலைவராகவும், அமைச்சரவை அங்கத்தவராகவும், அமைச்சரவையின் தலைவராகவும் காணப்படுகின்றார் என்பதனை நீங்கள் கண்டுகொள்ளலாம்.

ஜனாதிபதி அமைச்சரவையின் தலைவராகவும் உள்ள அமைச்சரவையானது கூட்டாக நாடாளுமன்றத்திற்கு பொறுப்பும் பதிலும் கூறவேண்டிய ஒன்றாகவும் காணப்படுகின்றது.

மேலும், அரசியல் யாப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் 51ஆவது உறுப்புரையின் பிரகாரம், தற்போதைய ஜனாதிபதி, ஜனாதிபதி பதவியில் இருக்கும் வரையில், பாதுகாப்பு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் போன்றவற்றின் விடயங்களையும் செயற்பாடுகளையும் தனக்கு நியமித்துக்கொள்ள முடியும். அதைப்போன்றே இது தொடர்பிலான அமைச்சுக்களையும் தீர்மானித்துதன்னகத்தே வைத்துக்கொள்ள முடியும்.

ஜனாதிபதி தனது சொந்த விருப்பத்தின் பேரில் பாதுகாப்பு, மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் போன்றவற்றின் விடயங்களையும், செயற்பாடுகளையும் தனக்கு நியமித்துக் கொண்டுள்ளார்.

இது தவிர மேலும் சில விடயங்களையும் செயற்பாடுகளையும் ஜனாதிபதி தனக்கு நியமித்துள்ளார்.

7. ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் அதன் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலைவராவார்.

8. எனவே, தற்போதைய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி, பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகிக்கும் அமைச்சராகவும், அமைச்சரவையின் தலைவராகவும், நிறைவேற்றின் தலைவராகவும், அரசின் தலைவராகவும், அமைச்சரவையின் அங்கத்தவராக இருக்கின்ற காரணத்தினால் கூட்டாக நாடாளுமன்றத்திற்குப் பதிலும் பொறுப்பும் கூறவேண்டிய ஒருவராக இருக்கின்ற அதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவராகவும், அதன் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் திகழ்கிறார்.

9. எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் அதன் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மிக முக்கியமான உறுப்பினராவார். மேலும், அவரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கும்படியான கோரிக்கையை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரே கோரியிருந்தார்.

10. எனவே, ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தின் தலைவராகவும், அரசின் தலைவராகவும், பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகிக்கும் அமைச்சரவையின் அங்கத்தவராகவும் அந்த அமைச்சரவையின் தலைவராகவும் இருக்கும் அதேவேளை அவரும் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கும்படிக்கு கோரப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பினதும் அதன் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்களாக இருப்பதனை நீங்கள் விளங்கிக்கொள்வீர்கள்

11. எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதியின் கடமைகள் செயற்பாடுகள் மற்றும் எதிர்க்கட்சி தலைவராக மஹிந்த ராஜபக்ஷவின் கடமைகள், செயற்பாடுகளிற்கிடையில் மிகத் தெளிவான முரண்பாடு காணப்படுகின்றமையை நீங்கள் கண்டு கொள்ளலாம்.

அவர்கள் இருவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும் மற்றும் அதன் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் உறுப்பினர்களாவார்கள்.

இந்தப்பின்னணியில், நாட்டின் முன்னணி சட்ட மேதைகளில் ஒருவரான கலாநிதி நிஹால் ஜெயவிக்கிரம 2019 ஜனவரி 6ஆம் திகதி ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரையை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

அவர் பின்வருமாறு கூறுகிறார். அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி அரசின் தலைவராவார். அவரின் சொந்த விருப்பின் அடிப்படையில் மைத்திரிபால சிறிசேன ஒரே சிந்தனையை உடைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியி உள்ளடங்கலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலைவராக இருக்கின்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினராக தன்னை அடையாளப்படுத்தி கொள்ளும் மஹிந்த ராஜபக்ஷ இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்.

ஆகவே, ஜனாதிபதி எவ்வாறு ஒரே நேரத்தில் அரசின் தலைவராகவும் எதிர்க்கட்சியின் தலைவராகவும் செயற்பட முடியும்? அவர் அவ்வாறு செயற்படுவதானது அரசியல் யாப்பிலே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை ஜனநாயகப் பணப்பை மீறும் செயலாகும் என்பதனையும் குறித்து நாடாளுமன்றம் ஜனாதிபதியிடம் விளக்கம் கேட்ட வேண்டும் என்று கலாநிதி நிஹால் ஜெயவிக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

அவரின் இந்தக் கூற்றானது இங்குள்ள முரண்பாட்டைத் தெளிவாகக் காட்டுகின்றது. மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக இல்லாவிட்டால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அந்த அங்கீகாரத்தை நீங்களே அவருக்கு வழங்கியிருந்தீர்கள்.

12. முன்னாள் ஜனாதிபதிகளின் காலங்களிலும் இப்படியான சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளதாகக் காட்டும் முயற்சியொன்றும் இடம்பெறுகின்றது. இத்தகைய கேள்வி இதற்கு முன்பு எழுப்பப்படவில்லை என்பதனையும், இத்தகைய கேள்விக்கு எந்தவொரு சபாநாயகராலும் தீர்ப்பொன்று கொடுக்கப்படவில்லை என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்போது இந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இதற்கு அரசியல் யாப்பின் பிரகாரமும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் பிரகடனங்களின் அடிப்படையிலும் அரசின் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியின் தலைவர் ஆகிய பதவிகளில் காணப்படும் முரண்பாடுகளையும் கருத்தில் கொண்டு ஒரு தீர்வு காணப்பட வேண்டும்.

13. இந்தப் பின்னணியில், நாடாளுமன்ற நடைமுறைகள் குறித்த 'எர்ஸ்கின் மே' 24ஆம் பதிப்பின் 334 மற்றும் 335ஆம் பக்கங்களில் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் நேரம் தொடர்பிலும் அத்தகைய நேரத்தினை யார் தீர்மானிப்பது என்பது தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனை நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். நிலையியல் கட்டளை 14இன் பிரகாரம், 20 நாள்கள் அமர்வுகளில் ஒவ்வொரு அமர்விலும் எதிர்க்கட்சியினால் தெரிவு செய்யப்படும் விடயங்கள் அரசால் தெரிவு செய்யப்படும் விடயங்களை விட முன்னுரிமை பெறும்.

மேலும், 17 நாள்கள் எதிர்க்கட்சித் தலைவராலும் 3 நாட்கள் எதிர்க்கட்சியில் இரண்டாவது பெரும்பான்மையைக் கொண்ட கட்சியின் தலைவராலும் தீர்மானிக்கப்படும்.

இது அரசில் அங்கம் வகிக்காத நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மை அங்கத்தவர்களைக் கொண்ட கட்சியாக இருக்க வேண்டும் என நிலையியல் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறித்த காரணங்களின் அடிப்படையில் எதிர்க்கட்சியாகத் தெரிவு செய்யப்படும் கட்சி அரசில் அங்கம் வகிக்க முடியாது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

மேலும், நான் மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களின் அடிப்படியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்கின்றது. அதேவேளை, எதிர்க்கட்சியில் இரண்டாம் பெரும்பான்மையைக் கொண்டுள்ள கட்சிக்குக் கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தையும் இது வலியுறுத்துகின்றது.

அந்தநிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி/ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே எமது நாடாளுமன்றத்தில் உள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது நாடாளுமன்றத்தின் (அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டம் 8ஆம் பிரிவில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சிய நாடாளுமன்றத்தின் குறிப்புகளோ அல்லது அந்தச் சபையின் நடவடிக்கைகளோ அல்லது அச்சபையின் குழுவொன்றின் அறிக்கையோ முதல் தோற்ற அளவிலான ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

ஐக்கிய இராச்சிய நாடாளுமன்றத்தின் நடைமுறைகள் எமக்கும் தொடர்புடையதாக இருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

14. மேலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பட்டியலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பல ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் அதன் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஆளும் தரப்புக்கு மாறி இன்று அரச ஆசனங்களில் அரசை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பது மறுக்கப்பட முடியாத ஒன்றாகும்.

இந்த நிலைமை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் அதன் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அரசில் அங்கம் வகிக்கின்றது என்பதனை உறுதி செய்யும் அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் அதன் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு செயலாளரினால் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு பிரேரிக்கப்பட்டவருமான மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருப்பதற்கு தகுதியற்றவராவார் என்பதனையும் தெளிவாகக் காட்டுகின்றது

15. இரண்டாவது பிரச்சினை பின்வரும் விடயம் தொடர்பிலாகும்.

மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவேளை அவரது பெயர் பிரேரிக்கப்பட்டிருந்த கட்சியின் அங்கத்துவத்தை இழந்துள்ளதன் விளைவுகள் மற்றும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு யாப்பின் உறுப்புரை 99 உப பிரிவு 13 அ வின் பிரகாரமும் இது தொடர்பில் அந்தப் பிரிவில் உள்ளடக்கியுள்ள விடயங்களின் தாக்கம் போன்றவை தொடர்பானவையாகும்.

நீங்கள் ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் ஒரு தீர்ப்பைக் கொடுத்துள்ளதால் இந்த அறிக்கையில் இதனை நான் கையாளவில்லை என்பதனைப் பணிவாக தெரிவித்துக் கொள்கிறேன்.

16. எனினும் இந்த விடயம் இன்னமும் தீர்க்கப்படவில்லை என்பதனையும் இந்த விடயம் தொடர்பான ஒரு தீர்க்கமான முடிவு சரியான இடத்தில எட்டப்பட வேண்டும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

17. இந்த விடயம் தொடர்பில் உண்மை நிலைநாட்டப்படவேண்டும் என்பதோடு, இந்த நாட்டின் அதியுயர் சட்டமான அரசியல் சாசனமும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு கொடுக்கப்பட்டுள்ள உள்ளீடுகளும் தனி நபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சூழ்ச்சிகரமாக மாற்றியமைப்பதற்கோ திசை திருப்புவதற்கோ இடமளிக்கமுடியாது.

அத்தகைய நடவடிக்கையொன்றுக்குத் துணைபோவதென்பது அரசியல் யாப்பின் புனிதத் தன்மையை மறுக்கும் செயலாகவே பார்க்கப்படும்.

எனவே, அரசியல் யாப்பும் அதன் நடைமுறைகளும் நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் சாசனங்கள் என்பன முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதி செய்து கொள்வதற்கான இந்தக் காரணங்களை பதிவு செய்வது எனது கடமையாக கருதுகின்றேன்.

18. மேலும் நானோ அல்லது இலங்கை தமிழரசுக்கட்சி/தமிழ்த் தேசியக்கூட்டமைப்போ பதவி ஆசை பிடித்தவர்கள் அல்லர் என்பதனை மிகத் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

நாங்கள் ஒருபோதும் பதவிகளை நாடினவர்கள் அல்லர். எமக்கு நாடாளுமன்றத்தில் ஆறு வருடங்கள் இருக்கின்ற சந்தர்ப்பம் இருந்தபோதும் 1983ஆம் ஆண்டு கொள்கையின் நிமித்தம் நாங்கள் சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்த காரணத்தினால் தமிழர் விடுதலை கூட்டணியைச் சேர்ந்த 16 பேர் எமது நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்தோம்.

16 பேரில் முதலாவதாக உறுப்புரிமையை இழந்தவன் நான். பொதுமக்கள் அறிந்திருக்கின்ற பிரகாரம் மேலும் பல தடவைகளில் நாங்கள் பதவிகளை ஏற்க மறுத்துள்ளோம்.

ஆனால், பேரினவாதத்தை விதைக்கும் ஒரு சிலரின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அரசியல் யாப்பையோ ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் சாசன நடைமுறைகளையோ சாசனங்களையோ திரிவுபடுத்தி திசை திருப்புவதன் மூலம் சிறுபான்மை கட்சிகளினதும் சிறுபான்மை மக்களினதும் உரிமைகள் பாதிக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

மேலும், அரசியல் சாசனத்தில் சிறுபான்மைக் கட்சிகளுக்கும் சிறுபான்மை மக்களுக்கும் உள்ள உரித்தானது பாதுகாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். ஆகையினாலேதான், சபாநாயகரே இந்த அறிக்கையை நான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது இன்றியமையாதது எனக் கருதுகிறேன்.

– இப்படி இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார். (ஐ)

# மஹிந்தவையும், கோட்டாவையும் தண்டிக்குமாறு கோரி காளி பூஜை!

## எக்னெலிகொடவின் மனைவி நடத்தினார்

கொழும்பு, ஜன. 26

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் ஆக்கப்பட்டமைக்கு, மஹிந்த ராஜபக்ஷவும், கோட்டாபய ராஜபக்ஷவும் தான் பொறுப்புக்கூற வேண்டும் என, பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக நேற்றுமுன்தினம் மாலை போராட்டம் ஒன்றை முன்னெடுத்த சந்தியா, மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினருக்கு எதிராகவும் கருத்து தெரிவித்திருந்தார்.



கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக தீப்பந்தங்களை ஏந்தியும், காளி தேவி வழிபாட்டிலும் ஈடுபட்ட அவர், பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் நீதி கிடைக்கவில்லை என்பதால் இந்தப் பிரச்சினையை கடவுளிடம் ஒப்புவிக்க தீர்மானித்ததாகவும் இதன்போது தெரிவித்தார். (ஐ)

# மன்னிப்புச் சபை ரணிலுக்கு கடிதம்

## பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் உண்மையைக் கண்டறியுமாறு

கொழும்பு, ஜன. 26

காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் ஆக்கபூர்வமான விசாரணைகளை மேற்கொண்டு உண்மையை கண்டறியுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கோரியுள்ளது.



நேற்று முன்தினம் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போய் ஒன்பது வருடங்கள் நிறைவடைந்த நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

பிரகீத் எக்னெலிகொட காணாமற்போனமை தொடர்பாகக் கடந்த நான்கு வருட விசாரணையில் சிறிதளவு தகவல்களே சி.ஐ.டியினருக்கு கிடைத்துள்ளன. அத்துடன் தற்போது இந்த வழக்கு நீதிமன்றில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றபோதிலும் சி.ஐ.டி,மற்றும் பொலிஸார் கோரிய விவரங்களை இராணுவம் முழுமையாக வழங்கவில்லையெனவும் மன்னிப்புச் சபை தனது அதிருப்தியை தெரிவித்துள்ளது.

எக்னெலிகொட காணாமற்போக முன்னர் இராணுவ முகாம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# வெளியே வாருங்கள் போராடுவோம் தொண்டாவுக்கு திகாம்பரம் அழைப்பு

கொழும்பு, ஜன. 26

கூட்டுஒப்பந்தப் பேச்சிலிருந்து தொழிற்சங்கங்கள் வெளியேறினால், அரசிலிருந்து வெளியேறி தொழிலாளர்களுக்காகப் போராடுவதற்கு நானும் தயாராகவே இருக்கின்றேன். – என்று அமைச்சர் திகாம்பரம் நேற்று அறிவித்தார்.

பெருந்தோட்டத்தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சபைஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கையிலேயே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குதான் குறைந்த அளவு சம்பளம் வழங்கப்படுகின்றது. இன்று வெள்ளவத்தையிலிருந்து புறக்கோட்டைக்கு ஓட்டோவில் வருவதாக இருந்தால்கூட 500 ரூபாவுக்கு அதிக தொகையைக் கட்டணமாக செலுத்த வேண்டும்.



எனவே, அடிப்படைச் சம்பளமாக 500 ரூபாவைப் பெறும் எம் தொழிலாளர்கள் எவ்வாறு வாழ்வது? காலத்துக்குக் காலம் மட்டும் கூட்டு ஒப்பந்தம் குறித்து பேசாமல், அந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமானதொரு தீர்வு காணப்படவேண்டும்.

ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தமது உரையின்போது தெரிவித்த சில கருத்துகளை நாம் ஏற்கின்றோம். ஆனால், சில விடயங்களை ஏற்க முடியாது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குத் தற்போது தனிவீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் சில உரிமைகளையும் பெற்றுக்கொடுத்து வருகின்றோம். இவையெல்லாம் இந்த அரசின்கீழ்தான் நடக்கின்றன.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பிரதான தொழிற்சங்கமொன்று தொழிலாளர்களிடம் ஒரு முகத்தையும், முதலாளிமார் சம்மேளனத்திடம் மற்றுமொரு முகத்தையும் காட்டுகின்றது.

எனது தாயும் மலையில் கொழுந்து பறித்தவள். தொழிலாளர்களின் வலி, வேதனை என்னவென்பது எனக்குத் தெரியும். எனவே, அவர்களை ஒரு போதும் ஏமாற்றவோ, காட்டிக் கொடுக்கவோ மாட்டேன்.

பெருந்தோட்டங்கள் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். உரம் உள்ளிட்ட நிவாரணங்களை அரசு வழங்கவேண்டும். தற்போதைய நிலை தொடருமானால் இன்னும் 20 ஆண்டுகளுக்கு பிறகு தோட்டங்களில் வேலை செய்ய ஒருவர்கூட இருக்கமாட்டார்கள்.

கூட்டுஒப்பந்தப்பேச்சில்தொண்டமானே தன்னிச்சையாக முடிவெடுக்கின்றார். என்ன நடக்கின்றது என்பது ஏனைய தொழிற்சங்கங்களுக்குத் தெரிவதில்லை.

அதேவேளை, கூட்டுஒப்பந்தப் பேச்சிலிருந்து தொழிற்சங்கங்கள் வெளியேறினால், நானும் அரசிலிருந்து வெளியேறி தொழிலாளர்களுக்காகப் போராட தயாராகவே இருக்கின்றேன். எமக்கு பதவிகள் முக்கியமில்லை–என்றார். (ஐ)

# அமெரிக்காவின் தற்காலிகத் தளம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகாதா?

## சபையில் ஜே.வி.பி. கேள்வி

கொழும்பு, ஜன. 26

அமெரிக்க விமானப்படை மற்றும் கடற்படைக்கு இலங்கையின் ஊடாக விநியோகங்களை மேற்கொள்வதற்கு தற்காலிகத் தளம் அமைக்க அரசு இடமளிப்பது இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாதா என ஜே.வி.பி. சபையில் கேள்வி எழுப்பியது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பி ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இந்தக் கேள்வியை முன்வைத்தார்.



இதற்கு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல பதிலளிக்கையில்,

அமெரிக்காவுடன் இலங்கை அரசு பாதுகாப்பு உடன்படிக்கைகளை செய்து கொள்வது புதிய விடயமல்ல. இதற்கு முன்னர் இருந்த அரசுகளும் இவ்வாறான விடயங்களைச் செய்துள்ளன. எனினும் உங்கள் கேள்வியை அரசின்கவனத்துக்குக்கொண்டு செல்கிறேன்–என்றார். (ஐ)

# யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளர்களை பார்வையிடுவதற்கு புதிய நடைமுறை

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிட இருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவதற்கான பாஸ் வழங்கல் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பாஸ் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல் மேற்கொண்ட பின்னர், பாஸ் நடைமுறைப்படுத்துவது தொடர்பில், வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்கள், மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்டோரிடம் கருத்துக்களும் பெறப்பட்டன.

தாதியர்கள் மற்றும் நோயாளர்களின் கருத்துக்களுக்கு இணங்க எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் முதல் யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிட பாஸ் நடைமுறைப்படுத்தவுள்ளது என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

யாழ். போதனா வைத்தியசாலையில் 1250 ற்கும் மேற்பட்ட படுக்கைகள் உள்ளன. நோயாளர்கள் விடுதிகளில் சிகிச்சை பெறுகின்றபோதும், 3 வேளைகளிலும் பார்வையாளர்களை அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த சில வருடங்களாக ஒரு நோயாளரைப் பார்வையிட அதிகமானவர்கள் வருகின்றமையால், நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றதுடன், மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் அவசர நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

ஒரு நோயாளரைப் பார்வையிட அதிகமான பார்வையாளர்கள் வந்து அந்த நோயாளரைச் சுற்றி நிற்கும்போது, அருகில் உள்ள நோயாளிகள் பாதிக்கப்படுகின்றனர் என முறைப்பாடு கிடைத்துள்ளது.

இந்த விடயங்களை வைத்தியசாலை நிர்வாகம் மிகவும் தீவிரமாக விசாரணைகளை முன்னெடுத்ததன் அடிப்படையில் ஒரு நோயாளியைப் பார்க்க நோயாளிக்கு அருகில் இருவர் மாத்திரமே செல்ல முடியும்.

பலர் வைத்தியசாலைக்கு வருகை தந்தாலும், அவர்கள் வைத்தியசாலையின் தரித்துச் செல்லும் பகுதியில் இருந்து, நோயாளியைப் பார்க்கச் சென்றவர் வந்த பின்னர், இருவராகச் சென்று பார்வையிட முடியும்.

அவ்வாறு பார்வையிடுவதனால் நோயாளர்களுக்கு ஏற்படும் கிருமித் தொற்றுக்கள் தவிர்க்கப்படுவதுடன் காற்றோட்டத்தை வழங்க முடியும். அத்துடன் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் நோயாளிக்கு தகுந்த சிகிச்சை அளிப்பதற்கும் உதவியாக இருக்கும்.–என்றார்.

காலையயில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். நோயாளருக்கு உணவு வழங்க மாத்திரம் ஒருவர் காலை 6 மணிமுதல் 6.30 மணி வரை அனுமதிக்கப்படுவார். பார்வையாளர் நேரம் :– நண்பகல் 12மணிமுதல் 1 மணி வரை, பி.ப. 5 மணி முதல் மாலை 6 மணி வரை. (ஐ–07)

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் நடால்



மெல்போர்ன்,ஜன.26

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிசில் சிட்ஸிபஸை நேர்செட் கணக்கில் எளிதில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார் ரபேல் நடால்.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான முதல் அரையிறுதி போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் 2ஆம் நிலை வீரரான ரபேல் நடால், டெபரரை தோற்கடித்த இளம் வீரரான கிரீஸின் சிட்ஸிபஸ் – ஐ எதிர்கொண்டார்.

நடாலின் அதிரடிக்கு சிட்ஸிபஸ்ஸால் ஈடுகொடுக்க முடியவில்லை. முதல் செட்டை 6:2 எனவும், 2ஆவது செட்டை 6:4 எனவும், 3ஆவது செட்டை 6:0 எனவும் கைப்பற்றி 3:0 என நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் பேட்டிக்கு முன்னேறினார் நடால். இந்த ஆட்டத்தில் நடால் ஒரு கேம்ஸை கூட இழக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அனைத்துவகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெற்றார் ஜொஹான் போதா



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான சகலதுறை வீரர் ஜொஹான் போதா சகலவிதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுகிறேன் என புதன்கிழமை (23) திடீர் அறிவிப்பை விடுத்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அணியுடன் நடைபெற்ற போட்டியில் தென்னாபிரிக்க அணியின் 80 ஆவது ஒருநாள் வீரராக சர்வதேச கிரிக்கெட்டுக்குள் தடம் பதித்திருந்தார்.

தென்னாபிரிக்க அணியில் இணைந்ததன் பின்னர் துடுப்பாட்டத்திலும் அவதானம் செலுத்திய ஜொஹான் போதா பின்னர் ஒரு சகலதுறை வீரராக மாறியிருந்தார். அதனை தொடர்ந்து 2006 இல் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகம் பெற்றார். 5 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் விளையாடிய நிலையில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

தென்னாபிரிக்க அணியின் தலைவராக செயற்பட்டு வந்த கிரேம் ஸ்மித் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகியதை தொடர்ந்து, உபதலைவராக செயற்பட்டுவந்த ஜொஹான் போதா 2010 ஒகஸ்ட் 20 ஆம் திகதி தென்னாபிரிக்க அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

2006 ஆம் ஆண்டு ஆஸி. அணியுடன் நடைபெற்ற போட்டியில் ரி20 அறிமுகம் பெற்ற இவர் 2012 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ரி20 உலகக் கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்க அணி முதல் சுற்றுடன் வெளியேறியதை தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இதன் பின்னர் தொடர்ந்தும் முதல் தர போட்டிகளிலும், ரி20 லீக் தொடர்களிலும் விளையாடி வந்தார். தற்போது ஆஸியில் நடைபெற்றுவரும் கே.எவ்.சி பிக் பேஷ் லீக் (Big bash) தொடரில் ஹோபட் அணிக்காக விளையாடி வந்த நிலையில் ஹோபட் அணி அடைந்த தோல்வியை தொடர்ந்து தான் சகலவிதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் இந்த தொடருடன் ஓய்வு பெறுகிறேன் என நேற்றுமுன்தினம் (23) திடீர் அறிப்பை விடுத்துள்ளார்.

# சிங்கர் கிண்ண கிரிக்கெட் தொடர் யாழ்.மத்திய கல்லூரி அபார வெற்றி

யாழ்ப்பாணம்,ஜன.26

சிங்கர் நிறுவனம் 19 வயதின் கீழ்ப்பட்ட பிரிவு 3 (டிவின் – III) பாடசாலை அணிகளுக்கு இடையே ஒழுங்கு செய்து நடத்தி வரும் இரண்டு நாட்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமைகிழமை (23) நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அபார வெற்றி பெற்றது.

மாரவில சொந்த மைதானமான எல்பர்ட் பீரிஸ் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (22) நடைபெற்ற இப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய புனித சேவியர் கல்லூரி அணி, யாழ் மத்திய கல்லூரி வீரர்களின் அபார பந்துவீச்சினால் 30 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன்போது, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் பந்துவீச்சில் திவாகரன் மற்றும் விவாஸ்டன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றியிருந்தனர்.

பின்னர் தங்களது முதல் இனிங்ஸில் துடுப்பாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர்கள் அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 248 ஓட்டங்களை குவித்துக் கொண்டனர். அவ்வணியின் துடுப்பாட்டத்தில் ஜயதர்சன் அரைச்சதம் தாண்டி 54 ஓட்டங்களைப் பெற இந்துஜன் 41 ஓட்டங்களுடன் தனது தரப்பினை வலுப்படுத்தியிருந்தார்.

தொடர்ந்து 218 ஓட்டங்கள் பின்தங்கியவாறு தமது இரண்டாம் இனிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பம் செய்த புனித சேவியர் கல்லூரி இம்முறையும் மோசமான துடுப்பாட்டத்தை வெளிக்காட்டி 81 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து இன்னிங்ஸ் மற்றும் 137 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் பந்துவீச்சில் திவாகரன் வெறும் 11 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை சாய்த்து தனது தரப்பு வெற்றியை உறுதி செய்திருந்தார்.

# டிக்வெல்லவின் துடுப்பாட்டத்தில் இருந்து இலங்கை அணி நிறைய கற்க வேண்டும்

## சொல்கிறார் திமுத் கருணாரத்ன

நிரோஷன் டிக்வெல்லவின் சாதகமான துடுப்பாட்டத்தில் இருந்து தமது அணி அதிகம் கற்க வேண்டும் என்பதை இலங்கை அணியின் உப தலைவர் திமுத் கருணாரத்ன ஒப்புக்கொண்டுள்ளார்.



விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரரான டிக்வெல்ல சிறப்பாக துடுப்பாடி 64 ஓட்டங்களை பெற்று 9 ஆவது வீரராக ஆட்டமிழந்தார்.


அவர் எப்போதும் இப்படி ஆடுவார். ஏழாவது வரிசையில் துடுப்பெடுத்தாடிய அவர் பொதுவாக பின்வரிசையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடுவார். அந்த துடுப்பாட்ட பாணியில் சிறப்பாக செயற்பட்டார். நிலைத்து ஆடும் துடுப்பாட்ட வீரர் ஒருவருடன் அவர் துடுப்பெடுத்தாடினால் நிலைமையை புரிந்து கவனமாக ஆடுவார். ஆனால் கடைசி வரிசை வீரர்களுடன் ஆடினால் அவர் தனது துடுப்பாட்டத்தை வெளிப்படுத்துவார். சாதகமாக ஆடுவதை அவரிடம் இருந்து எம்மால் கற்க முடியும். நாம் அனைவரும் அவ்வாறு விளையாடினால், ஓட்டங்களை பெற முயற்சித்து, 200 இற்கும் மேல் ஓட்டங்களை பெற முடிந்திருக்கும் என்று முதல் நாள் ஆட்டத்துக்கு பின்னர் நடந்த ஊடக சந்திப்பில் கருணாரத்ன குறிப்பிட்டார்.

அவர் பந்தை அடித்த பாணிகள் சில, எம் ஒருவராலும் செய்ய முடியாதது. அவ்வாறு பந்தை அடித்தாடுவதில் மிகச் சிறப்பாக உள்ளார். அவர்களுடன் அவர் அதிக ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ளார். தனது ஆட்டம் பற்றி அவர் தெரிந்தே இருப்பதோடு, எந்த பந்துவீச்சாளரை இலக்கு வைக்க வேண்டும் மற்றும் எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்று அவர் தெரிந்திருக்கிறார். ஆட்டம் பற்றிய அவரது அறிவு அபாரமானது. எமக்கு அவர் ஒரு சொத்தாகும் என்று திமுத் மேலும் குறிப்பிட்டார்.

பந்து மென்மையாகும் போது நாம் உச்சத்தை பெற தவறிவிட்டோம். நல்ல ஓட்டங்களை எடுப்பதற்கு நாம் திட்டங்களை வகுத்து ஆடியிருக்க வேண்டும். இளஞ்சிவப்பு பந்து மென்மை அடையும் போது உண்மையில், அதிக சாதகங்களை பெற முடியவில்லை. மத்திய வரிசை வீரர்கள் மேலும் சாதகமாக ஆட வேண்டும் என்றும் திமுத் கருணாரத்ன குறிப்பிட்டார்.

முதல் மணித்தியாலத்தில் நன்றாக செயற்பட்டோம். எனினும் திரிமான்ன ஆட்டமிழந்த பின் ஓட்டங்கள் பெறுவதற்கு போராடினோம். அதுவே முக்கிய விடயமாகும். நாம் சாதகமாக ஆட வேண்டும் அப்படி இல்லை என்றால் 150 மற்றும் 170 போன்ற ஓட்டங்களையே பெற வேண்டி இருக்கும். அடுத்த முறை நாம் சாதகமாக துடுப்பெடுத்தாட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## ஹர்திக் பாண்டியா, ராகுல் மீதான தடையை நீக்கியது பி.சி.சி.ஐ.



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களான ஹர்திக் பாண்டியா மற்றும் கேஎல் ராகுல்ஆகியோர் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக பிசிசிஐ தெரிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க துடுப்பாட்டவீரர் கேஎல் ராகுல். சகலதுறைவீரர் ஹர்திக் பாண்டியா. இருவரும் 'காபி வித் கரண்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அப்போது பெண்களுக்கு எதிரான கருத்துக்களை கூறினார் எனச் சர்ச்சை எழுந்தது.

இதுதொடர்பாக பிசிசிஐ அவர்களை இடைநிறுத்தம் செய்தது. இதனால் இருவரும் ஆஸ்திரேலியாவில் இருந்து உடனடியாக இந்தியா திரும்பினார்கள். ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் இருவர் மீதான விசாரணை நிலுவையில் உள்ளதால் பிசிசிஐ அவர்கள் மீதான தடையை ரத்து செய்துள்ளது. இந்த உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது.

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவும் உறுதிபடுத்தியுள்ளது என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமெரிக்க இராணுவ முகாம் அமைக்கப்படின் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நாடாளுமன்றில் எச்சரித்தார்.

அத்துடன், இது தொடர்பாக முழுமையான தெளிவுபடுத்தல் அவசியம் என்றும் அவர் மன்றைக் கோரியிருந்தார்.

அவரது குற்றச்சாட்டு தொடர்பாகப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் கிரியெல்ல மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையே சிறந்த இரு தரப்பு உறவு காணப்படுகிறது. நாம் சர்வதேசச் சட்டங்களைப் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளோம். இந்நிலையில், இலங்கையில் அமெரிக்க இராணுவத் தளமொன்றை அமைப்பதற்கான எவ்வித விருப்பமும் இல்லை.

அதுவும் கிழக்கு மாகாணத்தில் இராணுவத் தளம் அமைப்பதற்கான அவசியம் இல்லை. அவ்வாறானதொரு கருத்தை நாம் வெளியிடவில்லை. அமெரிக்கத் தூதரகமும் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே, இவ்வாறான விடயங்கள் குறித்து உரையாற்றுவதற்கு முன்னர் அது தொடர்பாக தெளிவடைய வேண்டியது அவசியம் – என்றார். (ஐ)

## சிங்கப்பூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

உத்தியோகப்பூர்வவிஜயத்தை மேற்கொண்டு சிங்கப்பூருக்கு சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், சிங்கப்பூர் பிரதமர் லீ ஹைன் லோங்குக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அவர் சிங்கப்பூர் பிரதமர் ஜனாதிபதி மற்றும் தேசிய அபிவிருத்தி அமைச்சர் டெஸ்மன்ட் லீ ஆகியோரைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிட்டாமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எது.

தொழில் அமைச்சில் நேற்று நடைபெற்ற கூட்டு ஒப்பந்த பேச்சின் போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் திங்கட்கிழமை கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளொன்றுக்கான அடிப்படைச் சம்பளம் 700 ரூபாவாகவும், விலைக் கொடுப்பனவு 50 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலதிகமாக பறிக்கப்படும் ஒரு கிலோ தேயிலைக்கான கொடுப்பனவாக 40 ரூபாவை வழங்கவும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான மொத்தச் சம்பளமாக 855 ரூபாவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குமாறு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரிகேடியரைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள் பரிசீலனைக்கு உட்படுத்துமாறு வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரிட்டன் வாழ் தமிழர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக வெஸ்ட்மின்ஸ்டர் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான நடவடிக்கைகளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்துமாறு இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஊடாகப் பிரிட்டன் நீதிமன்றத்தில் அறிவிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ தரப்பு நியாயங்களை ஆதாரங்களுடன் வழங்குமாறு திலக் மாரப்பனவிடம், பிரிட்டன் தூதுவர் கோரியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை தீர்த்து தருவோம் என்ற சமூக ஒப்பந்தத்துடன் தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதியும் பிரதமரும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டுமெனவும் இருவரும் மனம் விட்டு கலந்து பேசி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தார்மீக கடமையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சிறுபான்மை மக்களின் புரையோடிப்போன பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் அக்கறையுடன் செயற்பட்டு, அரசுக்குப் பல அழுத்தங்களை தொடர்ந்தும் வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியா நகரில் அவருக்கு அளிக்கப்பட வரவேற்பு விழாவின்போது உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

நான் மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சராக இருந்தபோது 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிறைப்பிடிக்கப்பட்ட 12 ஆயிரம் இளைஞர்களை அரசு விடுவிக்க நடவடிக்கை எடுத்தேன்.

இவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுக் குடும்பத்துடன் மீண்டும் இணைந்து வாழ வழிவகை செய்தோம். தற்போது சிற் சில குற்றங்களுக்காக நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சிறைகளில் வாடுகின்றனர்.

அவர்களின் குடும்பங்கள் நிர்க்கதியாகியும் உள்ளன. சிலரின் மனைவிமார் இறந்துவிட்டதால் பிள்ளைகள் அனாதையாகிவிட்டனர் . இந்த நிலையில் மனிதாபிமான அடிப்படையில் இவ்விளைஞர்களை விடுதலை செய்யுமாறு வேண்டுகின்றேன்.

போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களும் களத்தில் நின்று வழிகாட்டியவர்களும் தற்போது ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றனர். அதே போன்று இவர்களும் சமுதாயத்தில் சுதந்திரமாக வாழ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

வடக்கு – கிழக்கில் பொதுமக்களின் பாவனைக்குரிய பல்லாயிரக்கணக்கான காணிகள் இராணுவத்தினர்களாலும் வன பரிபாலன மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினாலும் கையகப்படுத்தப்பட்டுள்ளன .

இவற்றையும் அரசு விடுவித்து உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் – என்றார். (ஐ)

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ன? அவ்வாறு அமையப் பெறுமாயின் அது நாட்டின் அறைமைக்கு அச்சுறுத்தலாகாதா எனப் பிரதமரிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார். நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு கேள்வி யெழுப்பினார்

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த சில தினங்களில் பல்வேறு ஊடகங்களில் வெளிவந்த விடயங்கள் மற்றும் தகவல்கள் என்பவற்றின் பிரகாரம் அமெரிக்க தூதரகத்துக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் பேச்சு மேற்கொள்ளப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றை இலங்கையில் அமைப்பது தொடர்பான விடயம் பற்றி இந்நாட்டு மக்கள் அச்சத்துக்கு ஆளாகியுள்ளனர்.

முக்கியமாக அதனைக் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை பிரதேசத்தில் அமைப்பதற்கு இதன் பிரகாரம் எதிர்பார்க்கப்படுவதாக தகவல் வெளிவந்துள்ளமையால் அந்த விடயம் தொடர்பாக எனது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்தத் தகவல்கள் பற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர சில தினங்களுக்கு முன்னர் டெய்லி மிரர் பத்திரிகைக்குச் செவ்வியொன்று வழங்கியுள்ளமை தொடர்பாகவும் இங்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும். இது பற்றி டெய்லி மிரர் பத்திரிகையின் முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியாகக் குறிப்பிடப்பட்டிருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

அதனால் இந்தத் தகவல் பற்றிய நம்பகத்தன்மை பற்றி எம்மால் உறுதிப்படுத்திக்கொள்ளக் கூடியதாக உள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக அத்துரலியே ரத்ன தேரருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இவ்விடயம் தொடர்பான பல்வேறு தகவல்கள் பற்றியும் எமக்கு அறியக் கிடைத்துள்ளது.

இதில் யாதேனுமொரு உண்மைத் தன்மை இருப்பின் அது எமது நாட்டின் இறைமைக்கும் தேசிய சுதந்திரத்திற்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையும் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். எனவே இவ்விடயம் பற்றிய பூரண அறிக்கை ஒன்றினை வழங்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன் – என்றார். (ஐ)

## நாயாற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கோவில் வளாகத்தில் அத்துமீறி நிர்மாணிக்கப்பட்ட விகாரைக்கு அருகில், கடந்த புதன்கிழமை புத்தர் சிலையொன்று திறக்கப்பட்ட நிலையில், பிரதேச மக்களாலும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் தரப்பிலிருந்தும் பலத்த எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையிலேயே, அந்த விகாரைக்கு, பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பு வழங்குமாறு தான் விடுத்த கோரிக்கையை அடுத்தே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக விகாரையின் விகாராதிபதி கொழும்பு மேதாலங்கார தேரர் தெரிவித்துள்ளார்.

அந்த விகாரை, கி.பி 3ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்டு உள்ளதென வரலாற்றுச் சான்றுகள் உள்ளதாகவும், தற்போது இந்தப் பிரதேசம், தொல்பொருள் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் தேரர் கூறினார். (ஐ)

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலை நடத்துவது தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒன்பது மாகாண சபைகளில் ஆறு மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ளன. மேலும் இரு மாகாண சபைகள் இன்னும் இரண்டரை மாதங்களில் கலைக்கப்படவுள்ளன.

வீர தீரத் தலைவர் என ஐ.தே.க.வினால் போற்றப்படும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபைக்கு ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றவேண்டும்.

இதனை நிறைவேற்ற பிரதமர் தவறும் பட்சத்தில் போற்றப்பட்டவர்களின் வாய்களினாலேயே அவர்கள் தூற்றப்படுவார்கள்.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்தபோது, நாம் வெற்றி பெறுவதைப் பற்றிச் சிந்திக்கவில்லை. ஜனநாயகத்தைத் துளிர்விடச் செய்வதே அப்போது எமது நோக்கமாக இருந்தது.

இந்நிலையில், மனசாட்சிக்கு இடமளித்து மக்கள் குரலை ஒலிக்க அனுமதிக்குமாறு ஐ.தே.க.வினரிடம் கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்த தேர்தல் என்ன என்ற விடயத்திலும், ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதிலும் தொங்கிக் கொண்டிருக்காது இந்தத் தீர்க்கமான தேர்தலை நடத்துமாறு கோருகிறோம் – என்றார். (ஐ)

## ஜனநாயகத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறையையும் ஜனநாயகத்தையும் விமர்சித்து வருகின்றனர் எனப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றில் விவாதமொன்றுக்கும் செல்லத் தயார் என்றும் அவர் மேலும் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கவுக்கு என்ன நடந்தது என எம் அனைவருக்கும் தெரியும். 17 ஆவது திருத்தச் சட்டத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்துதான் கொண்டுவந்தோம்.

ஆனால், மஹிந்த அரசு 18 ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டுவந்தது. அனைத்தையும் மாற்ற முயற்சித்தார்கள். இதன் விளைவாகவே மஹிந்த கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தோல்வியடைந்தார்.

தற்போது உயர்நீதிமன்றம் கடந்த டிசெம்பர் மாதம் வழங்கிய தீர்ப்பை விமர்சித்து வருகிறார்கள். யார் இதற்கெல்லாம் காரணம்? ஜனநாயகத்தை மீறியவர் யார்? அனைத்துக் குற்றங்களையும் செய்துவிட்டு நீதித்துறையையும் சட்டத்தரணிகளையும் விமர்சிப்பதில் என்ன பயன்? இதற்கு நாம் இடமளிக்க முடியாது. அரசமைப்புச் சபையினாலேயே நியமனங்கள் அனைத்தும் சுயாதீனமாக வழங்கப்பட்டுள்ளன – என்றார். (ஐ)

## மஹிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபை மேயர் ரோஸி சேனாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்தோடு, ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஆயத்தங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்பினால் நாடு பிளவடையும் எனக் கூறுகிறார்கள். இது முற்றிலும் பொய்யான ஒரு கருத்தாகும். எந்தவொரு அரசியல்வாதியும் தனது நாடு பிளவடைவதைப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார். அவ்வாறு இருக்கும்போது ஏன் பொய்யான தகவல்களை ஊடகங்கள் வாயிலாகப் பரப்பவேண்டும்?

அதையும் மீறி, புதிய அரசமைப்பினால் நாடு பிளவடையும் எனக் கூறும் தரப்பினர், தாராளமாக நிபுணர்களுடன் பகிரங்கமாக ஊடக விவாதமொன்றுக்குச் செல்லலாம்.

தற்போது அரசமைப்பு தொடர்பான வரைவொன்றுகூட வரவில்லை. இந்நிலையில் தேவையில்லாத இனவாதத்தை எதிரணியினர் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான இனவாதத்தினாலே ஜனாதிபதித் தேர்தலுக்கும் அந்த தரப்பினர் உடனடியாகச் சென்றார்கள் – என்றார். (ஐ)

## மாலியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர். மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

மாலியில் ஐ.நா. அமைதிப் படையினருக்கான விநியோக வழித்துணைப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இலங்கை இராணுவ அணி மீது, உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 6.30 மணியளவில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

மாலியின் மத்திய பகுதியில் உள்ள டோன்ற்சா என்ற இடத்தில், ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போதே, இலங்கை இராணுவ அணி தாக்குதலில் சிக்கியது.

இதில், துருப்புக்காவி கவச வாகனம் ஒன்று முற்றிலும் சேதமடைந்தது. அதற்குப் பின்னால் சென்ற மற்றொரு வாகனமும் சேதமுற்றது.

இந்தத் தாக்குதலில் துருப்புக் காவி கவச வாகனத்தில் பயணம் செய்த இலங்கை இராணுவத்தின் 11 ஆவது இலகு காலாட் படையைச் சேர்ந்த கப்டன் ஜெயவிக்ரம, 1ஆவது இயந்திர காலாட் படையைச் சேர்ந்த கோப்ரல் விஜேகுமார ஆகியோர் உயிரிழந்தனர்.

பொறியியல் படைப்பிரிவைச் சேர்ந்த கோப்ரல் குமாரசிங்க, லான்ஸ் கோப்ரல் புஷ்பகுமார, லான்ஸ் கோப்ரல் சந்திரசேகர ஆகியோர் படுகாயம் அடைந்தனர்.

படுகாயமடைந்த இலங்கை படையினர் நைகர் ஆற்றங்கரையில் உள்ள வணிக நகரான காவோவில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக மாலியில் ஐ.நா அமைதிப்படையில் இலங்கைப் படையினர் பணியாற்றி வருகின்றனர்.

200 பேர் கொண்ட இலங்கை இராணுவ அணி அங்கு நிலை கொண்டுள்ளது. முதல் முறையாக இலங்கை இராணுவ அணி அங்கு தாக்குதல் ஒன்றில் சிக்கி உயிரிழப்புகளைச் சந்தித்துள்ளது.

உயிரிழந்த இலங்கைப் படையினரின் சடலங்கள் விரைவில் கொழும்புக்குக் கொண்டு வரப்படும் என இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார். (ஐ)

## பேசாலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

நடுக்குடா கடற்கரையோரத்திலுள்ள காட்டுப் பகுதியில் பரல் ஒன்றில் மர்மப் பொருட்கள் காணப்படுவதாகப் பொதுமகன் ஒருவரால் பேசாலைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் பரல் ஒன்றிலிருந்து கிளைமோர் 1, ஜெலிக்னைட் 04, துப்பாக்கி மற்றும் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் என்பவற்றை மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் கூறினர். (ஐ-100)

# முதல்வர் கதிரையைக் குறிவைத்து 8 எம்.பிக்கள் பதவி துறக்கத் தயார்!

## பழைய முறையிலேயே மாகாணத் தேர்தல்

கொழும்பு, ஜன. 26

மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதம் நடைபெறுவதற்குரிய அறிகுறிகள் அரசியல் களத்தில் பிரகாசமாக தென்படுகின்றன.

இதில் களமிறங்குவதற்காக தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 8 எம்.பிக்கள் தமது எம்.பி. பதவியைத் துறக்கத் தயாராக உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பழைய முறையிலேயே (விகிதாசார முறை) மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் நாடாளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு உட்பட ஆறுமாகாண சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்து அவற்றின் நிர்வாகம் ஆளுநரின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றன. மேல், ஊவா, தென் ஆகிய மாகாணசபைகளின் பதவிக் காலம் இவ்வருடத்தில் நிறைவு பெறுகின்றன.

எனவே, இம்மூன்று சபைகளும் முன்கூட்டியே கலைக்கப்பட்டு 9 சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியாவதற்கு முன்னரே, தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் பிரதான கட்சிகள் இறங்கியுள்ளன.

தொகுதி அமைப்பாளர் நியமிப்பு உட்பட கீழ்மட்ட அரசியல் இயந்திரம் பலப்படுத்தப்பட்டுவருவதுடன், கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சுகள் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன.

தேசிய மட்டத்திலான தேர்தலொன்றுக்கான நாடிபிடிப்பாக, வெள்ளோட்டமாக மாகாணசபைத் தேர்தல் கருதப்படுவதால் இம்முறை பலமுனைப்போட்டி நிலவும் என்பதுடன், தேர்தல் களமும் பரபரப்பின் உச்சத்தைத் தொடும் எனலாம்.

அதேவேளை, பிரதான அரசியல் கட்சிகளின் சார்பில் ஒரு சில மாகாணங்களுக்கான முதலமைச்சர் வேட்பாளர்களாகத் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களே களமிறங்கவுள்ளனர்.

இது தொடர்பில் கட்சியின் உயர்மட்டத்துடன் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன. தேர்தல் அறிவிப்பு வெளியானதும் சுமார் 8 எம்.பிக்கள் தமது பதவியை இராஜினாமா செய்யவுள்ளனர்.

அத்துடன், சில மூத்த அரசியல்வாதிகளின் வாரிசுகளும் இந்தத் தேர்தல் ஊடாகவே கன்னி அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளனர். வடக்கு, கிழக்கு, மலையகம், தெற்கு என அனைத்து மாகாணங்களிலும் இதை காணக்கூடியதாக இருக்கும். (ஐ)

# நெடுங்குளத்தில் காணி சுவீகரிப்புக்கு நேற்று மக்கள் திரண்டு கடும் எதிர்ப்பு



யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணம், நெடுங்குளம் பகுதியில் காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் மேற்கொண்ட எதிர்ப்பைத் தொடர்ந்து காணி அளவிடும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

அந்தப் பகுதியில், 300 பரப்புக் காணியை அரசு சுவீகரிப்பதற்காக, அளவிடும் பணிகள் நேற்று வெளிக்கிழமை முன்னெடுக்கப்படவிருந்தன.

இந்நிலையில், காணி உரிமையாளர்கள் தமது காணிகளைச் சுவீகரிக்க அனுமதிக்கமாட்டோம் என்றும், மீறிச் சுவீகரித்தால் சாகும் வரையான உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத்துத் தடுப்போம் என்றும் கூறி எதிர்ப்பு வெளியிட்டனர்.

அதனைத் தொடர்ந்து, அப்பகுதி கிராம சேவகர் மற்றும் ஏனைய அதிகாரிகள் பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றைத் தருமாறு கோரியதற்கிணங்க, காணி சுவீகரிப்பை எதிர்த்தவர்கள் மகஜர் ஒன்றை வழங்கினர். இதனை அடுத்து காணி அளவிடும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

இந்தப் போராட்டத்தில், யாழ். மாநகரப் பிரதி முதல்வர் மற்றும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள காணியைச் சுவீகரிக்கப் போவதாக யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால், காணி சுவீகரிப்பு அறிவித்தல் பத்திரம் ஒன்று ஒட்டப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தல் பத்திரத்தில், உரிமை கோரப்படாத காணியை சுவீகரிக்கவுள்ளதால், காணி உரிமையாளர்கள் அந்த இடத்தில் இருந்தால், உடனடியாகப் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய காணி உரிமையாளர்கள், காணி உரிமத்துக்குரிய ஆவணங்களைப் பிரதேச செயலகத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

எனினும், காணி சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால், யாரும் உரிமை கோரமுடியாதெனப் பிரதேச செயலகத்தில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபரிடமும் காணி உரியையாளர்கள் முறையிட்டுள்ளனர். (ஐ-07)

(மற்றொரு செய்தி 4ஆம் பக்கத்தில்)

# புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால் வடக்கு, கிழக்கில் இரத்த ஆறு ஓடும்!

## கடும் தொனியில் விமல் எச்சரிக்கை

புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால் அது விடுதலைப்புலிகளின் தமிழீழக் கனவை நனவாக்கியமைக்குச் சமனாகும். எனவே, இந்த நிலைமை ஏற்பட்டால் வடக்கு, கிழக்கில் மீண்டும் இரத்த ஆறு ஓடும். தமிழ் மக்கள் மீளவும் பேரவலங்களைச் சந்திக்க வேண்டி வரும். இவை வேண்டுமெனில் புதிய அரசமைப்பை அரசு நிறைவேற்றட்டும்.

– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ.



கொழும்பு ஊடகவியலாளர் ஒருவருக்கு வழங்கியுள்ள பிரத்தியேகசெவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

நாம் தமிழர்களுக்கு எதிரிகள் அல்லர். தமிழர்களும் எமக்கு எதிரிகள் அல்லர். ஆனால், வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளினால் நாடாளுமன்றத்துக்கு வந்த சம்பந்தனும் சுமந்திரனும் இன்று தமிழர்களுக்குத் துரோகம் செய்துள்ளார்கள்.

இருவரும் போலி வாக்குறுதிகளை வழங்கித் தமிழர்களை ஏமாற்றி வருகின்றார்கள். ரணில் அரசைக் காப்பாற்றி வருகின்றார்கள்.

முப்பது வருடங்களாகப் பயங்கரவாதிகளின் ஆதிக்கத்தில் வடக்கு, கிழக்கு சிக்குண்டு இருந்தது. இதனால் தமிழ் மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்தார்கள்.

2009ஆம் ஆண்டு எமது இராணுவ வீரர்கள் தமது உயிர்களை அர்ப்பணித்து வன்னி மக்களைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்டெடுத்தார்கள்.

புலிகளின் பயங்கரவாதப் போருக்கு எமது படை வீரர்கள் முடிவு கட்டினார்கள். அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் வேண்டுகோளின் பேரில் வன்னி மக்களை மீட்கும் போராட்டம் மாபெரும் வெற்றிபெற்றது.

வன்னி மக்களை மீட்டெடுத்த தெய்வமாக மஹிந்த ராஜபக்ஷ விளங்குகின்றார்.

ஆனால், இதனைப் பொறுக்க முடியாத புலிகளின் புலம்பெயர் அமைப்புகள் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கும் இராணுவ வீரர்களுக்கும் 'போர்க்குற்றவாளிகள்' என்ற மோசமான பட்டத்தை வழங்கினார்கள்.

இந்தப் பட்டம் ஐ.நாவிலும் எதிரொலித்தது. ஆனால், நாம் அஞ்சவில்லை. தலைநிமிர்ந்து நிற்கின்றோம்.

இன்று புலிகளின் புலம்பெயர் அமைப்புகளின் வலையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு சிக்கியுள்ளது.

புலம்பெயர் அமைப்புகளினதும் சம்பந்தன் – சுமந்திரன் ஆகியோரினதும் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் புதிய அரசமைப்பை நிறைவேற்ற ரணில் அரசு முற்படுகின்றது. இதற்கு நாம் ஒருபோதும் இடமளியோம்.

நாட்டைப் பிளவுபடுத்தி இங்கு மீண்டும் புலிகளுக்கு புத்துயிர் கொடுக்க முற்படும் ரணில் அரசுக்கு விரைவில் நாம் முடிவு கட்டி மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறுவோம். ராஜபக்ஷ படையணியின் ஆட்சி மீண்டும் மலரும். இது உறுதி – என்றார். (ஐ)

# 2019 பட்ஜெட்டுக்கு பொது மக்களிடமிருந்து முன்மொழிவுகள் கோருகிறது நிதி அமைச்சு

கொழும்பு, ஜன. 26

*2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளை பெப்ரவரி 11 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தள்ளார்*

*பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும், 2019 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்ட முன்மொழிவுகளை* bdgtpromo.treasury.gov.lk *எனும் மின்னஞ்சல் மூலமோ அல்லது தபால்மூலமோ, பணிப்பாளர் நாயகம், வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம், செயலகம், நிதி மற்றும் ஊடக அமைச்சு, கொழும்பு 01. எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.*

*வலுவான பொருளாதாரம் மற்றும் வளமான நாடு எனும் தொனிப்பொருள் என்ற தலைப்பில் வரவு - செலவு திட்டம் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் மார்ச் 05 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.* (ஐ)

# மீண்டும் தேசிய அரசு? பேச்சுக்கள் மும்முரம்




கொழும்பு, ஜன. 26

மீண்டும் தேசிய அரசை உருவாக்குவது தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வருடன், இது தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

இந்நிலையில், இந்த எம்.பிக்களுடன், பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன என்றும், அவ்வாறு தேசிய அரசு அமைக்கப்படுமாயின் அவர்கள், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கத் தயாராக உள்ளன என்றும் தெரியவருகிறது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.